Registered as a news paper.
பக்கங்கள்: பத்து
விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

**தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்**

ஆசியாவின் நம்பர் 1 சீமேந்து
SLS 107 அங்கீகாரம் பெற்றது.
ISO 9002 தரம் பெற்றது.
BSS 12 - 1991 தரத்திற்கு அமைவானது.
இவை அனைத்தையும் கொண்ட உயர்தர சீமேந்து.
ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
சீமேந்து
ரா ம் கோ
(சி-1295)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 ஆடி 22 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ஐ.ஆகிர் 08 (07.08.2003) வியாழக்கிழமை இதழ்: 308

## மட்டுவிலில் அமுக்கவெடி வெடித்து இரண்டு குடும்பஸ்தர்கள் படுகாயம்!

(யாழ்ப்பாணம்)

மட்டுவில் பகுதியில் - நேற்றுக்காலை, தோட்டம் ஒன்றில் வேலையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த இருவர், அமுக்கக் கண்ணிவெடியில் சிக்கி படுகாயமடைந்தனர்.

மட்டுவில் வடக்கில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில், அதேயிடத்தைச் சேர்ந்த செல்லன் சபாநாயகன் (வயது 45) என்ற குடும்பஸ்தர் தனது இரு பாதங்களையும் இழந்தார். மட்டுவில் கிழக்கைச் சேர்ந்த எஸ்.பரராச சிங்கம் (வயது 57) என்பவர் படுகாயமடைந்தார்.

மட்டுவில், அம்மன்கோவிலடியில் - அமைந்துள்ள தோட்டக் காணியொன்றில் வேலையில் ஈடுபட்டிருந்தபோதே, இந்த அமுக்கவெடி பாரிய சத்தத்துடன் வெடித்துள்ளது.

படுகாயமடைந்த இருவரும் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வருகின்றனர்.

## பொலிஸில் 5,000 வெற்றிடங்கள்

பொலிஸ் திணைக்களத்தில் - 5,112 வெற்றிடங்கள் உள்ளன என்று, பொலிஸ் மா அதிபரால் நியமிக்கப்பட்ட குழு தெரிவித்துள்ளது.

கடந்த எட்டு வருட காலத்தில், பதவியுயர்வுகள் வழங்காமை, வெற்றிடங்கள் நிரப்பப்படாமை போன்ற பல்வேறு விடயங்களை, இந்தக் குழு தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

கடந்த வாரம், இந்தக் குழு உள்நாட்டமைச்சின் செயலாளரிடம் இந்த அறிக்கையைக் கையளித்துள்ளது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஜே.வி.பி. - சுதந்திரக்கட்சி கூட்டணிக்கு லங்கா சமசமாஜக் கட்சி கடும் எதிர்ப்பு!

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும், ஜே.வி.பிக்கும் இடையில் கூட்டணி அமைக்க இடம்பெறும் பேச்சுவார்த்தைக்கு, லங்கா சமசமாஜக் கட்சி கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

சுதந்திரக் கட்சிக்கும், ஜே.வி.பிக்கும் இடையில், கூட்டணி அமைப்பது சம்பந்தமான பேச்சுவார்த்தை, அடுத்த சில தினங்களுககுள் முடிவடையும் என்றும், அனால் உடன்படிக்கை எப்போது கைச்சாத்திடப்படும் என்பதைக் கூறமுடியாதுள்ளது என்றும் சுதந்திரக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை - சுதந்திரக்கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையில் நடைபெறும் பேச்சுவார்த்தையில், பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு எவ்வித தொடர்பும் இல்லையென, லங்கா சமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளர், பட்டி வீரக்கோன் தெரிவித்துள்ளார். (10 ஆம் பக்கம் பார்க்க)

# யாழ்.புனர்வாழ்வு நிதி மோசடி வழக்கு;

# காசோலைகள் சி.ஐ.டி. விசாரணைக்கு!

## கையளிக்க நீதிவான் உத்தரவு

(யாழ்ப்பாணம்)

**யாழ். மாவட்ட புனர்வாழ்வு, புனரமைப்புத் திட்டங்களுக்கென ஒதுக்கப்பட்ட நிதியில், இடம்பெற்ற பாரிய ஊழல் தொடர்பாக விசாரணைகளில் ஈடுபட்டுவரும் குற்றப் புலனாய்வுப் பொலிஸாரிடம் -**

**முன்னாள் அரச அதிபரால் கையாளப்பட்ட பதினேழு காசோலைகளையும் ஒப்படைக்கும்படி, யாழ். மாவட்ட நீதிவான் இ.த.விக்னராஜா உத்தரவிட்டுள்ளார்.**

1999 ஆம் ஆண்டுமுதல் 2002 ஆம் ஆண்டுவரையான காலப்பகுதியில், யாழ்.மாவட்ட புனர்வாழ்வு, புனரமைப்பு செயற்திட்டங்களில் மோசடிகள் இடம்பெற்றிருப்பது செயலகக் கணக்காய்வின்போது தெரியவந்தது.

பதின்நான்கு செயற்திட்டங்களில், நான்கு கோடி ரூபா மோசடி இடம்பெற்றிருப்பது கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து, இது தொடர்பான விசாரணைகளை சி.ஐ.டி. பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

இந்த மோசடி வழக்கு, நேற்று யாழ். நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது -

(10 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் - இராணுவம் வவுனியாவில் சந்திப்பு!

(வவுனியா)

வவுனியாவில் நேற்று முன்தினம் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்குமிடையில் கண்காணிப்புக் குழு முன்னிலையில் சந்திப்பொன்று இடம்பெற்றது.

இச்சந்திப்பில், இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் புலிக்கொடி ஏற்றுவதானது, போரைத் தூண்டும் ஒரு செயலென இராணுவத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதனை மறுத்த புலிகளின் வவுனியா மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலன், இது வழக்கமான ஒரு செயற்பாடென்றும், ஜே.வி.பி போன்ற கட்சிகள் - கூட்டங்களில் தமது கட்சிக்கொடிகள் ஏற்றமுடியு

(10 ஆம் பக்கம் பார்க்க)

### மட்டக்களப்பில் நேற்றிரவு

## தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அலுவலகம் மீது கிரனைட் வீச்சு!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில், தமிழர் புனர்வாழ்வுக்கழத்தின் அலுவலகம் மீது, நேற்றிரவு கைக்குண்டுத் தாக்குதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

நேற்றிரவு 8.20 மணியளவில் மட்டக்களப்பு புனித சிசேரியன் வீதியில் அமைந்திருந்த தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் அலுவலகம் மீதே இனந்தெரியாதோரால் கைக்குண்டு வீசப்பட்டது.

இந்தச் சம்பவத்தில், அலுவலகத்தின் முன்பகுதி சேதமடைந்ததுடன், அங்கு நிறுத்திவைக்கப்பட்டி

(10 ஆம் பக்கம் பார்க்க)

## போரால் பாதிப்படைந்த சிறுவர்களுக்கு மட்டக்களப்பில் இடைத்தங்கல் முகாம்!

மட்டக்களப்பில், போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கும் நோக்கில், 'யுனிசெப்' நிறுவனத்தின் அனுசரணையுடன், தமிழர் புனர்வாழ்வுக் கழகம் அமைக்கும் இடைத்தங்கல் முகாமுக்கு அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகத் தலைவர் தலைமையில் இடம்பெற்ற, இந்நிகழ்வில், முகாமுக்கான அடிக்கல்லை திருமலை - மட்டு ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை நாட்டினார்.

தமிழர் புனர்வாழ்வுக்கழக நிறைவேற்றுப் பணிப்பாளர் கே.பி.ரெஜி இங்கு உரையாற்றும்போது -

வடக்கு -கிழக்கில் போரினால் பாதிக்கப்பட்ட 55 ஆயிரம் சிறுவர்கள் உள்ளனர். இவர்களுக்கு சரியான திட்டங்களை ஏற்படுத்தி, அவர்களை வளமாக்கி, மீண்டும் பெற்றோரிடம் ஒப்படைக்கும் பட்சத்தில்தான் இந்தத் திட்டம் வெற்றியளிக்கும் என்று தெரிவித்தார்.

இந்த நிகழ்வில், 'யுனிசெப்' நிறுவனத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி, மட்டு - அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி ரமேஷ் உட்பட நிறுவனங்கள் பலவற்றின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.



மட்டக்களப்பில் அமைக்கப்படவிருக்கும் இடைத்தங்கல் முகாமுக்கான அடிக்கல் நாட்டுவிழாவில், தமிழர் புனர்வாழ்வுக் கழக நிறைவேற்றுப் பணிப்பாளர் கே.பி.றெஜி மங்கள விளக்கேற்றுவதையும், மட்டு.- திருமலை ஆயர் மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அடிக்கல் நாட்டுவதையும், மட்டு - அம்பாறை சிறப்புத் தளபதி ரமேஷ் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்

### விண்ணாணம் விநாசியர்



ஆர், ஆரோட கூட்டணியெண்டு விளங்குதில்ல...!

EXPOAIR
your friend in the skies...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 2226297
0712348888 0712349999 074512666 01360290 01360291
email . jaffna @ expoavi . com.
(சி -1139)
எக்ஸ்போஎயார்
வான் வெளியில் உங்கள் தோழன்...

# இந்திய மீனவர்களின் அத்துமீறலால் எமது பிரதேச வளங்களுக்கு பாதிப்பு

## நெடுந்தீவு கடற்தொழிலாளர் சங்கத் தலைவர்

கடந்த மாதம் நடைபெற்ற நெடுந்தீவு பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், அப்பிரதேச மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றி நெடுந்நீவு கடற்தொழிலாளர் சங்கத் தலைவரால் பிரஸ்தாபிக்கப்பட்டது.

இந்திய இழுவைப் படகுகள், நெடுந்தீவு கடற்பகுதியில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவதனால் - இங்குள்ள மீனவர்கள் பெரும் வாழ்வாதாரப் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர் என, கடற்தொழிலாளர்கள் சங்கத் தலைவர் தெரிவித்தார்.

இந்திய இழுவைப்படகுகளின் அத்துமீறிய செயலினால்- எமது பிரதேச வளங்கள் அள்ளிச் செல்லப்படுவதுடன், பெருமளவு பணத்தினை முதலிட்டு, தொழில்முயற்சிகளை மேற்கொள்ளும் வறிய மீனவர்கள் பாதிக்கப்படுகின்றனர். இதனால், தமது அன்றாட வாழ்க்கையினை நடத்தவே பெரும் சிரமப்படுவதாகவும் அவர் கூறினார்.

அத்துடன், இவ்வாறு இழுவைப் படகுகளில் வரும் இந்திய மீனவர்களை, இத்தீவின் எல்லையில் வைத்து- நெடுந்தீவு பாதுகாப்பிற்கென உள்ள பொலிஸாரோ, கடற்படையினரோ கைதுசெய்ய கைதுசெய்ய ஏன் நடவடிக்கை எடுப்பதில்லை என, கேள்வி எழுப்பினார்.

எமது பாதுகாப்பிற்கென இருப்பதாகக் கூறுவோர் பாராமுகமாக இருப்பதன் காரணம் என்ன. இதுவே ஒரு சிங்களப் பிரதேசமாக இருந்தால், இவ்வாறு நடந்து கொள்வார்களா என சீற்றத்துடன் வினாவினார்.

எனவே, இப்பிரச்சினைக்கு ஒரு தெளிவான முடிவினை எமக்கு, இங்குள்ள படையினர் தரவேண்டும். இல்லையேல், அத்துமீறிய மீன்பிடித்தலினால்- எமது தீவக மக்கள் பெரும் கஷ்டநிலைக்கு தள்ளப்படுவதனை தடுத்து நிறுத்த முடியாதென தெரிவித்தார்.

# பேனா வடிவத் துப்பாக்கி கடவத்தை பகுதியில் மீட்பு!

எட்டு அங்குல நீளம் கொண்ட- உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட, பேனா வடிவில் அமைந்த கைத்துப்பாக்கி ஒன்று - கடவத்தை பொலிஸாரால் கடந்த திங்கட்கிழமை மீட்கப்பட்டுள்ளது.

கைத்துப்பாக்கியை வைத்திருந்தது தொடர்பாக, கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்களில ஒருவர்- ராணுவத்திலிருந்து விலகியவர் எனவும், கைததுப்பாக்கியை தயாரிப்பதற்கு, வேறு ஒரு துப்பாக்கியின் பகுதிகளை பாவித்ததாகவும், கடவத்தை பொலிஸ் அதிகாரி தெரிவித்தார்.

ஒரு பேனாவின் அமைப்பில், இத்துப்பாக்கியின் பாகங்கள் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் 9 மில்லிமீற்றர் துப்பாக்கியின் குண்டு செல்லும் தூரத்திற்கு, குண்டைச் செலுத்த முடியும் என்பதும், 10 யார் தூரத்திற்குள்தான், இதன்மூலம் சரியாகச் சுடமுடியும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# வரவேற்பாளர் இன்மையால் சிரமத்திற்குள்ளாகும் மக்கள்!

யாழ்.செயலகத்தில் வரவேற்பாளர் இல்லாமையினால், மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.

தமது தேவைகளை நிறைவு செய்வதற்காக, பெருமளவு மக்கள் தினமும் யாழ்.செயலகத்திற்கு வருகைதருகின்றனர். ஆனால், அவர்கள் தாம் செல்லவேண்டிய அலுவலகத்திற்கு வழிதெரியாமல் தவிக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக தூர இடங்களிலிருந்து வருவோரும், இடம்பெயர்ந்து சென்று மீண்டும் யாழில் மீளக் குடியேறியவர்களும், இவ்வாறு - யாழ். செயலகத்தில் நிற்பவர்களிடம் வழிகேட்டு நிற்பதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

இதற்கு முன்னர், இப்பதவியில் கடமையாற்றி ஊழியர் ஒருவர் - வேறு அலுவலகத்திற்கு இடம்மாற்றப்பட்டு - ஒருமாத காலத்திற்கு மேலாகியும், இதுவரை எவரும் அப்பதவிக்கு நிரப்பப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## முல்லைத்தீவுப் பிரதேசத்தில் தெருக்கூத்து!

சமகால அரசியல் நிலையைத் தெளிவுபடுததும், புதுவை அன்பனின் நெறியாள்கையில் உருவாக்கப்பட்ட 'கரைதேடும் ஓடங்கள்' என்னும் தெருவெளி நாடகம், முல்லைத்தீவு மாவட்டத்தில் பிரதேசம் பிரதேசமாக ஆங்காங்கு மேடையேற்றப்பட்டு வருகின்றது.

'கரைதேடும் ஓடங்கள்' நாடகத்தை பெருமளவு மக்கள் பார்த்து வருகின்றனர். இத்தெருவெளி நாடகத்தின்போது, தற்கால அரசியல் கருத்துரையினை - கொள்கை முன்னெடுப்புப் பொறுப்பாளர் செல்வம் மாமா வழங்கிவருகிறார். (17)

## பன்றி கடித்து குடும்பஸ்தர் காயம்!

(வடமராட்சி கிழக்கு)

பன்றி கடித்து குடும்பஸ்தர் ஒருவர், இடதுகையில் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றார்.

வேட்டைக்குச் சென்ற நபர், பன்றியைக் கண்டு சுட்டபோது, குறிதவறியமையால் - பன்றி குறிப்பிட்ட நபரை, துரத்திக் கொண்டு சென்றது. அவர் வாய்க்கால் ஒன்றில் விழவே, துரத்தி வந்த பன்றி, நபரின் இடதுகையில் கடித்ததாகவும் காயமடைந்தவர் தெரிவித்தார். (17)

# திருமறைக்கலாமன்ற நாட்டுக்கூத்து விழா!

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலா மன்றத்தால், வருடந்தோறும் யாழ்.நகரில் நடத்தப்பட்டுவரும் தமிழ் விழா, இம்முறை நாட்டுக்கூத்து விழாவாக- எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 10 ஆம் திகதி முதல் 14 ஆம் திகதி வரை, 5 நாடகளுக்கு மிகப்பெரிய அளவில் நடத்தப்படவுள்ளது.

இந்த நாட்டுக்கூத்து விழாவில்- மட்டக்களப்பு, மன்னார், மலையகம், வன்னி, யாழ்ப்பாணம் பிரதேசக்கூத்து மரபுகளை - அந்தந்த பிரதேசக் கலைஞர்களைக் கொண்டு அரங்கேற்றுதல் மற்றும் நாட்டுக்கூத்து தொடர்பான ஆய்வரங்கங்கள், பரீட்சாத்த முயற்சிகள் என, ஒரு தேசிய அரங்கை நோக்கிய தேடலை ஏற்படுத்தும் நோக்கோடு, இந்த விழா நடத்தப்படவுள்ளது.

காலையில் கருத்தரங்குகளாகவும், மாலையில் கலை நிகழ்வுகளாகவும் இந்த விழா நடத்தப்படும்.

நாட்டுக்கூத்து விழாவை முன்னிட்டு, யாழ்.திருமறைக் கலா மன்றத்தால் - தென்மோடி நாட்டுக் கூத்துப் போட்டி ஒன்றும் நடத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.


## யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ.து) திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்

## பதவி வெற்றிடம்

எமது சங்கத்தில் பின்வரும் நிரந்தரப் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. விண்ணப்பிக்க விரும்புபவர்கள் எமது சங்கத்தினால் வழங்கப்படும் விண்ணப்பப் படிவங்களை அலுவலக வேலை நாட்களில் ரூபா10/- செலுத்திப் பெற்று பூர்த்தி செய்து 21.08.2003 ஆம் திகதி பி.ப.4.00 மணிக்கு முன்பு கிடைக்கத்தக்கதாக **பொதுமுகாமையாளர், யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்** என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும்.

1. பதவி: விற்பனை உதவியாளர் (நிரந்தரம்)
2. பதவி இல. : 165/88 இன் படி குறி: 308/15
3. சம்பளத்திட்டம: 31/99 இன் படி 3500 - 65x10-70x10-4850
4. அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்

(அ) கூட்டுறவுச் சங்க ஊழியர் 17 ஆம் சம்பளத்திட்டத்தில் விற்பனை உதவியாளர் பதவி ஒன்றில் ஐந்து வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

(ஆ) கூட்டுறவுப் பணியாளர் தர்ாதரப்பத்திரம் அல்லது (சாதாரணதரம்) சான்றிதழ்/க.பொ.த. (சாதாரணதரம்) சான்றிதழ் எண்கணிதம்/வர்த்தக எண்கணிதம்/கணிதம் மற்றும் சிங்களமொழி/தமிழ்மொழி உட்பட 6 பாடங்களில் சித்தி

5. வயது:

விண்ணப்பதாரிகள் 21.08.2003 இல் 18 வயதிற்கு குறையாதவர்களாயும், 45 வயதிற்கு மேற்படாதவர்களாயும் இருத்தல் வேண்டும்.

6. பொது நிபந்தனைகள்:

1. யாழ்.மாவட்டத்தில் இரண்டு வருடங்களுக்கு மேலாக வசித்தமையை உறுதிப்படுத்துவதற்குச் சான்றிதழ் சமர்ப்பிதல் வேண்டும்.
2. கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு பிரமாணங்களுக்கு அமைவாக நிர்வாகத்தினால் விதிக்கப்படும் பிணையைச் செலுத்துதல் வேண்டும்.
3. ஆட்சேர்ப்புச் செய்யப்படுபவர் இரண்டு வருடகால தகுதிகாண் காலப்பகுதிக்கு அமைந்தவராதல் வேண்டும்.
4. கல்வித் தகைமைகள், அனுபவம், வயது, வதிவிடத்தை உறுதிப்படுத்தல், நற்சான்றிதழ், தேசிய அடையாள அட்டை என்பவற்றின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் விண்ணபத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். இதற்கமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
5. தற்போது கூட்டுறவுச் சேவையில் உள்ளவர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது என்பதுடன், அவர்கள் பதவிகளுக்காக விண்ணப்பிக்கும்போது தமது விண்ணப்பங்களைச் சம்பந்தப்பட்ட சங்கத்தினூடாக அனுப்புதல் வேண்டும். இத்தகைய ஊழியர்கள் நேரடியாக விண்ணப்பத்தை அனுப்புதல், விண்ணப்பங்களை நிராகரிப்பதற்கும், தெரிவு செய்யப்பட்ட பின்னர் அது வெளிப்படுமிடத்து நியமனத்தை இல்லாதொழிப்பதற்கும் வழிவகுக்கும்.
6. விண்ணப்பத்தில் காட்டப்படும் தகவல்களும், இணைப்புக்களும் உண்மையானதும், செம்மையானதுமென உறுதிப்படுத்துவதோடு, ஏதேனுமொரு சந்தர்ப்பத்தில், இதில் ஏதேனுமொன்று பிழையானதெனவோ அல்லது பொய்யானதெனவோ காணப்படுமிடத்து நஷ்டஈடு பெறாது உடனடியாக பதவி நீக்கம் செய்யப்படுவீர்கள் என்பதனை தாங்கள் அறிந்து கொள்ளவேண்டும்.

**பொதுமுகாமையாளர்.**

(சி-1324)



துரிதமாகவும், துல்லியமாகவும் உங்கள் இல்லங்களிலிருந்து உலகெங்கிலுமுள்ள உங்கள் உறவினர்களுடன் குறைந்த கட்டணத்தில் வெளிநாட்டு தொடர்புகளுக்கு நாடவும்

**சிறி முருகன் தொலைத் தொடர்பு நிலையம்**

மற்றும்

**முகவர் தபால் நிலையம்**

303, கே.கே.எஸ்.வீதி,

யாழ்ப்பாணம்.

T.P - 021- 222 2670 Fax - 021-222 3214

e-mail - jel - smskr @ eureke.lk

(சி-1312)



**MEDICAL CHECK UP**

**வைத்திய பரிசோதனை**

நோய் வருமுன் காப்போம் திடீர் மரணத்தைத் தவிர்ப்போம்

- 40 வயதிற்கு மேற்பட்ட நோயுள்ள, நோயற்ற அனைவரும் இந்த MEDICAL CHECK UP ஐச் செய்வதன் மூலம் நோயற்ற சுகவாழ்வு வாழலாம்.
- X-RAY, ECG சில முக்கிய இரத்தப் பரிசோதனைகள், சிறுநீர்ப் பரிசோதனை இலவச வைத்திய ஆலோசனையுடன் கூடிய MEDICAL CHECK UP குறைந்த கட்டணத்தில்!

விபரங்களுக்கு நேரில்

போக்குவரத்து வசதி கருதி (சி-1311)

**சம்பந்தர் மொடேர்ன் கிளினிக்**

(அமுல் கிறீம் ஹவுஸ் அருகில்)

ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.



**ராஜா** யாழ்ப்பாணம்.

14ம் திகதி வரை

மாதவன், ஜோதிகா, ஸ்ரீதேவி

நடித்த A.V.M இன



10.30, 2.30, 6.30

ரீக்கெற் முற்பதிவு செய்து கொள்ளலாம். (சி-1284)

இயக்கம்: விக்ரமன்



**நிறைஞ்சனாஸ்** சங்கானை

இன்று முதல் சாருஹாசன், அஜித் நடித்த

**சாம்ராட் அசோகா**

(ஹிந்திப் படத்தின் தமிழாக்கம்)

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)

வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில் மட்டும்

**RED SCORPION**

இரவுக் காட்சி. 8.45 (பு.நே)

(சி-1285)



**மாபெரும் புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும்**

அநேக வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க இம்மாதம் 15 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. உங்களுக்குத் தேவையான சகலவிதமான புத்தகங்களும், ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள "புத்தகக் கடல்" 10% - 50% கழிவு வழங்கப்படும். ஒரு சில மருத்துவ, பொறியியல், கணினிப் புத்தகங்கள், ஆங்கிலம் கற்றுக்கொள்ளப் பாடசாலை மாணவர்களுக்கான ஒரு சில புத்தகங்களும், உபகரணங்களும் ரூபா 10 - ரூபா 100 வரை பெற்றுக்கொள்ளலாம். இவை தவிர பாடசாலை அலுவலக உபகரணங்களும், பாடசாலை அழிபொருட்கள், மூலப்பொருட்களும் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். பாடசாலைகளுக்கு இலவச விநியோகம். பணத்திற்கு பதிலாக வங்கிக்கடன் அட்டைகளும் பெற்றுக் கொள்ளப்படும்.

உங்கள் தேவை எதுவானாலும் பூர்த்திசெய்யத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-

**ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்**

இல.212, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

(சி/1306)

# இனத்துவேச அரசியல் காரணமாக இலங்கையில் யுத்தம் தோன்றியது!

## கருத்துக் கணிப்பில் 40 வீத மக்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில், இனத்துவேச அரசியல் காரணமாகவே யுத்தம் ஏற்பட்டதென, மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் நடத்திய கருத்துக்கணிப்பொன்றில், பெரும்பாலான மக்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

சிங்கள - தமிழ் - முஸ்லிம் மககளிடையே நடத்தப்பட்ட இந்தக் கணிப்பீட்டில் - 41.5 வீதமான மக்கள் இதனை வெளிப்படுத்தியுள்ளனர்.

மே மாதம் நடத்தப்பட்ட இந்தக் கணிப்பீட்டில், 50.6 வீதமான மக்கள்- அரசு தனது சமாதான இலக்கில் வெற்றிபெறும் எனவும், 87.4 வீதமான மக்கள் - இரண்டு தசாப்த கால இரத்தக் களரியை, பேச்சுவார்த்தை மூலமே முடிவுக்குக் கொண்டுவரமுடியுமெனவும் தெரிவித்துள்ளனர்.

மேலும் அக்கணிப்பீட்டில் 53 சத வீதமான மக்கள் உண்மையான அர்ப்பணிப்புடன் அரசு செயற்படுவதாகவும், 63 வீதமான மக்கள் - மூனறாம் தரப்பு ஈடுபாடு நேரடியான தாக்கத்தை ஏற்படுத்தும் எனவும் நம்புகிறார்கள்.

இந்திய உதவி அவசியம் என்று 60 வீதமான மக்கள் நம்புகின்ற அதேவேளை, நோர்வேயின் ஈடுபாடு தொடர்பான நம்பிக்கை 2003 இல் வீழ்ச்சி கண்டுள்ளது.

இதேவேளை, 29.1 வீதமான மக்கள் விடுதலைப் புலிகள் - மக்களை ஏமாற்றவே பேச்சுவார்த்தைக்குச் சென்றதாகத் தெரிவித்தனர்.

எனினும், சர்வதேச அழுத்தம் காரணமாகவும், பொருளாதார கஷ்டங்களுக்காகவும் பேச்சுவார்த்தைக்குச் சென்றனர் என, 23.25 வீதமான மக்களே தெரிவித்தனர்.

மாற்றுக் கொள்கைக்கான நிலையத்தின் சமூக ஆய்வுப் பிரிவினரால்- 1321 சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் மத்தியில் இந்த ஆய்வு நடத்தப்பட்டது.

(க)



இடைக்கால நிர்வாக அமைப்பிற்கு எதிராக, தேசிய பிக்குகள் முன்னணியினர் மேற்கொள்ளும் பிரசாரத்தில் - பொலிஸார் ஒருவருக்கு பிக்குமார் பிரசுரங்களை விநியோகிப்பதையும், அதை அவர் அலட்சியம் செய்வதையும் படத்தில் காணலாம்.

# புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின் புலனாய்வாளர்கள் பலர் படுகொலை!

## பாதுகாப்பு அமைச்சர் மாரப்பன தெரிவிப்பு

சமாதான உடன்படிக்கை கைச்சாத்தான பின்னர் - புலனாய்வுப் பிரிவினர் பலர் கொலை செய்யப்பட்டுள்ளனர் என்று, பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயராஜ் பெர்ணான்டோபுள்ளே கேட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளித்த அவர், சமாதான உடன்படிக்கை கைச்சாத்தான பின்னர், 8 புலனாய்வுப் படையினரும், மறைவில் தகவல் தரும் 11 பொதுநிலை ஊழியரும், 2 பொலிஸாரும் இதுவரை கொலைசெய்யப்பட்டதாகவும், 56 இராணுவ முன்னரண்கள் அகற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

# இலங்கையரைத் திருப்பி அனுப்பும் முயற்சி; பிரிட்டிஷ் அமைச்சருக்கு எதிராக வழக்கு!

(கொழும்பு)

பிரிட்டனில் அரசியல் புகலிடம் கோரிய தமிழர்களை, இலங்கைக்குத் திருப்பி அனுப்பும் முயற்சியில் ஈடுபட்டுள்ள பிரிட்டிஷ் உள்துறை அமைச்சருக்கு எதிராக, வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

அரசியல் புகலிடம் கோருபவர்களுக்கு ஆதரவாகச் செயற்படும் பிரிட்டிஷ் அமைப்பைச் சேர்ந்த ரொனா பீற்றசன் என்பவர், இந்த வழக்குக்கான ஆதாரங்களைத் திரட்டுவதற்கு இலங்கை வந்துள்ளார்.

இலங்கை வந்திருக்கும் இவர்- மனித உரிமை அமைப்புகள், சட்டத்தரணிகள், சிறைச்சாலையிலுள்ள தமிழ்க் கைதிகளைச் சந்திப்பதோடு, தமிழ்க் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் சந்திக்கவுள்ளார்.

அரசியல் புகலிடம் கோருபவர்களை, இலங்கைக்குத் திருப்பி அனுப்புவதற்கு ஏதுவான சூழ்நிலை, தற்போது இல்லை என்பதற்கான ஆதாரங்களைத் திரட்டி, அவர் இந்த வழக்கைத் தாக்கல் செய்யவுள்ளார் என அறியவருகின்றது.

### தமிழர் மீது யுத்தம் திணிக்கப்பட்டதால்

# வடக்கிலிருந்து சடலங்கள் பொதிகளாக கொழும்புக்கு!

## அமைச்சர் அஸ்வர் நாடாளுமன்றில் தெரிவிப்பு

கடந்த காலத்தில் - வடபகுதி மக்கள் மீது யுத்தம் திணிக்கப்பட்டது. இதனால், வடக்கிலிருந்து பொலித்தீன் பொதிகளில் சடலங்கள் அன்று கொழும்புக்கு வந்தன என, அமைச்சர் ஏ.எச்.எம்.அஸ்வர் நேற்றுமுன்தினம் நடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

அங்கவீனமுற்ற ஆட்களின் உரிமைகள் பாதுகாப்புத் திருத்தச் சட்ட மூல விவாதத்தில் கலந்துகொண்டு பேசும்போதே, அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- இன்று அவ்வாறான ஒரு நிலை இல்லை. வட பகுதியில் யுத்தம் காரணமாக இராணுவத்தினர் மாத்திரம் பாதிப்படையவில்லை, சாதாரண மக்களும் பாதிப்படைந்துள்ளனர். அவ்வாறு யுத்தத்தினால் பாதிப்படைந்த அங்கவீனர்கள் சார்பாக யுத்தத்தை நிறுத்துமாறு, நாம் உரதத்துக் கோருகின்றோம் எனவும், அவர் அங்கு தெரிவித்தார்.

### பெற்றோல், டீசல் விலை அதிகரிக்கப்படும்

பெற்றோல் மற்றும் டீசல் என்பவற்றின் விலை லீற்றருக்கு ஒரு ரூபா 50 சதத்தால் உயர்த்தப்படவுள்ளதாக பெற்றோலியக் கூட்டுத்தாபனத் தலைவர் தகம் விமலசேன தெரிவித்தார்.

ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி முதல் வீதி அபிவிருத்தி விசேடவரி அறவிடப்பட்டு வருவதே இந்த விலை உயர்வுக்குக் காரணம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### இடைக்கால நிர்வாகசபை அமைக்கும்

# அரசாங்கத்தின் செயற்பாட்டைக் கண்டித்து பத்துநாள் எதிர்ப்புப் பிரசாரத்தில் ஜே.வி.பி.!

இடைக்கால நிர்வாகசபையை விடுதலைப் புலிகளுக்குக் கையளிக்க முயற்சிக்கும் அரசின் செயற்பாட்டைக் கண்டித்து - மக்கள் விடுதலை முன்னணி 19 மாவட்டங்களில் பத்து நாட்கள் எதிர்ப்புப் பிரசார நடவடிக்கையை நடத்தவுள்ளது.

எதிர்வரும் 9 ஆம் திகதி தொடக்கம் 18 ஆம் திகதிவரை இந்த எதிர்ப்பு நடவடிக்கை இடம்பெறும் என்று தெரிவிக்கப்படுகிறது.

நாட்டில் தற்போது என்ன நடக்கிறது என்ற நோக்கில் துண்டுப் பிரசுரங்களையும் ஜே.வி.பி விநியோகிக்கவுள்ளது. மக்கள் விடுதலை முன்னணியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச உட்பட அனைத்து அரசியல் உயர்குழு உறுப்பினர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் அந்த எதிர்ப்புப் பிரசாரத்தில் ஈடுபடவுள்ளனர்.

# ஏரிக்குள் இடிந்து விழும் நிலையில் கல்வித் திணைக்களக் கட்டடம்!

யாழ். வலய கல்வித் திணைக்களத்தின் ஆசிரியர் ஆலோசக மண்டபம், ஜமுனா ஏரிக்குள் இடிந்து விழும் நிலையிலுள்ளது

பருவமழை ஆரம்பமாகவுள்ள இந்த வேளையில், ஜமுனா ஏரியின் பாதுகாப்புச் சுவரினைக் கட்டித் தடுக்காதுவிட்டால், மண்டபத்துடன் இணைந்த கல்விக் கழகம், வெளிக்கள நிலையம், வட இலங்கை சங்கீத சபை போன்றவையும் ஏரிக்குள் இடிந்து விழும்நிலை காணப்படுகின்றது.

நல்லூர் பிரதேச மாநகரசபை எல்லைக்குள் இருக்கும் இந்த ஜமுனா ஏரியின் பாதுகாப்பு சுவர், சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையின்போது ஏவப்பட்ட எறிகணை வீச்சின் அதிர்வின் காரணமாகவே இடிந்து விழுந்திருந்தது.

இதேவேளை, பாதிக்கப்பட்ட கலவித் திணைக்களத்தை, கல்வி அமைச்சின் வடக்கு - கிழக்கு மாகாண அதிகாரிகள் அண்மையில் சென்று பார்வையிட்டது குறிப்பிடத்தக்கது.

# மீனவர்களின் ஊர்வலத்தை தடுத்து நிறுத்திய பொலிஸார்!

## திருகோணமலை - மணிக்கூட்டு கோபுரத்தடியில் சம்பவம்

திருகோணமலையில் தடை செய்யப்பட்ட வலை மற்றும் டைனமைற் போன்றவற்றைப் பயன்படுத்தி மீன்பிடிப்பதற்கெதிராக, மீனவர்கள் நேற்று நடத்திய ஊர்வலத்தை, திருமலை மணிக்கூட்டு கோபுரத்தடியில் பொலிஸார் தடுத்து நிறுத்தினர்.

நேற்றுக்காலை திருமலை வீரநகர்ப் பகுதியிலிருந்து புறப்பட்டுச் சென்ற இந்த ஊர்வலத்தை, மணிக்கூட்டுக் கோபுரத்தினைக் கடந்து செல்ல பொலிஸார் அனுமதிக்க மறுத்ததையடுத்து, கண்காணிப்புக் குழுவினரிடம் இது தொடர்பாக முறைப்பாடு செய்யப்பட்டது.

இதேவேளை, இக்கண்டன ஊர்வலத்தின் இறுதியில் திருகோணமலை மாவட்ட கண்காணிப்புக் குழுத் தலைவரிடம் மகஜர் கையளிக்கவிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# தமிழ்மொழி பாடசாலை அதிபர்களுக்கு பதவி உயர்வுகள் வழங்கப்படாதது ஏன்?

## கேள்வி எழுப்புகிறார் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்

(கொழும்பு)

இலங்கை பாடசாலை அதிபர்கள சேவையில், தமிழ்மொழி மூல பாடசாலை அதிபர் பதவிகளுக்கு நேர்முகப்பரீட்சை நடத்தப்பட்டபோதும், அதிபர் தரத்தையுடைய பெருந்தொகையானோர் பதவியுயர்வின்றி உள்ளனர் என, நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் கேள்வி நேரத்தின் போது - எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஜினதாஸ ஹிதுல கொட - மனிதவள அபிவிருத்தி, கல்வி, கலாசார அலுவல்கள் அமைச்சரிடம் கேள்வியெழுப்பினார்.

நாடாளுமன்ற உறுப்பினர் தனது கேள்வியின்போது - கொழும்பு இராமநாதன் இந்துமகளிர் கல்லூரி அதிபர் ஆர்.சிவகுருநாதன் அறுபதாவது வயதைத் தாண்டியவராக இருந்த போதும் - அவருக்கு மூன்று சேவை நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது. அதே கல்லூரியில் பிரதி அதிபர்களின் பதவிகள் தகைமை அடிப்படையில் வழங்கப்படவில்லை. இது தொடர்பாக, அமைச்சர் கலாநிதி கருணாசேன கொடித்துவக்கு பதிலளிப்பாரா எனவும் கேள்வியெழுப்பினார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஜினதாஸ ஹதுலகொடவின் வினாவுக்கு, அரசாங்கத் தரப்பு பிரதம கொறடாவும், அமைச்சருமான மகிந்த சமரசிங்க பதலளிக்கையில், உரிய முறையில் கொழும்பு இராமநாதன் இந்துமகளிர் கலலூரி அதிபர் பதவிக்கு விண்ணப்பம் கோரப்பட்டது. தகுதியானவர்கள் இல்லாததால் திருமதி சிவகுருநாதனுக்கு பதவி நீடிப்பு வழங்கப்பட்டது. பிரதி அதிபருக்கான பதவிகளுக்கு உரிய முறையில் விண்ணப்பங்கள் கோரப்பட்டு, பிரதி அதிபர் நியமனங்கள் வழங்கப்படும் எனத் தெரிவித்தார்.



திருமலை - கிளிவெட்டி, ஈச்சிலம்பற்றையில் ஜி.ரி.இசற் ஏற்பாட்டில் நடைபெற்ற 'ஆரோக்கியமான வாழ்வு' என்ற கண்காட்சியில், சிறுவன் ஒருவன் தனது காட்சிப் பொருளுடன் காணப்படுகின்றான்.

# யாழ்.செயலக ஓய்வூதியக் கிளை மூடப்பட்டது

## பணிகள் பிரதேச செயலகங்களுக்கு மாற்றம்!

இதுவரை காலமும் யாழ். செயலகத்தில் இயங்கிவந்த ஓய்வூதியக் கிளை - கடந்த முதலாம் திகதி முதல் மூடப்பட்டுள்ளது.

1996 ஆம் ஆண்டு தொடக்கம் ஓய்வூதியக் கொடுப்பனவு சம்பந்தமான பணிகள் பிரதேச செயலகங்களுக்கு மாற்றப்பட்டிருந்தபோதும்- நிலுவைக் கொடுப்பனவுகள், இடம்பெயர்ந்த ஓய்வூதியர்களது கொடுப்பனவுகள், வெளிநாடுகளில் இருந்து வந்த ஓய்வூதியர்களது கொடுப்பனவுகள் போன்றன யாழ். செயலகத்தாலேயே மேற்கொள்ளப்பட்டு வந்தன.

ஆனால், தற்போது மேற்படி கொடுப்பனவு சம்பந்தமான வேலைகளும், அந்தந்தப் பிரதேச செயலங்களுக்கு மாற்றப்பட்டுள்ளதால், ஓய்வூதியர்கள் எவரும் செயலகத்திற்கு வரவேண்டியதில்லை எனவும், தேவைகளைத் தத்தமது பிரதேச செயலக ஓய்வூதியக் கிளையுடன் தொடர்புகொண்டு நிறைவு செய்யுமாறும், யாழ். மாவட்ட அரச அதிபர் அறிவித்துள்ளார்.

பிரதேச செயலகத்தில் உரிய சேவைகளோ அல்லது பதிவுகளோ இல்லாதுவிட்டால், பிரதேச செயலக ஓய்வூதியப் பகுதியினரே, யாழ். செயலகத்துடன் தொடர்புகொண்டு- கோவைகளைப் பெற்று, கொடுப்பனவுகளைச் செய்யலாம் எனவும் அரச அதிபர் மேலும் தெரிவித்தார்.

# போக்குவரத்து விதிமுறைகளை பொதுமக்கள் கவனிப்பதில்லை!

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் மக்கள் போக்குவரத்து விதிமுறைகளைக் கடைப்பிடிக்காததனால் - அநியாய உயிரிழப்புகளும், உடைமை இழப்புகளும் ஏற்படுவதாகப் போக்குவரத்துப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

போக்குவரத்து விதிமுறைகளைச் சரியான முறையில் கடைப்பிடிப்பதற்குப் பொலிஸார் பிரயத்தனங்களை மேற்கொண்டபோதும், வாகனச்சாரதிகள் இதற்கு மாறாக நடந்து கொள்வதாகவும் தெரிவித்துள்ளனர்.

இவ்விடயத்தில், பொதுமக்கள் சரியான வகையில் நடந்து கொண்டால், தேவையற்ற அசௌகரியங்களைத் தவிர்த்துக் கொள்ளலாம் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# வாக்காளர் இடாப்பு தயாரிக்கும் பணியில் தேர்தல் திணைக்களம் ஈடுபட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

இந்த ஆண்டுக்கான வாக்காளர் இடாப்புத் தயாரிக்கும் பணியில், தற்போது தேர்தல் திணைக்களம் ஈடுபட்டுள்ளது.

எனவே, 2003 ஆம் ஆண்டு 18 வயதினை அடைந்தவர்களும், இதுவரை வாக்காளர் இடாப்பில் தமது பெயர்களைப் பதிவுசெய்யாதவர்களும், உடனடியாக அப்பகுதி கிராம அலுவலர் ஊடாக இதற்கு விண்ணப்பிக்கும்படி, யாழ். மாவட்டத் தேர்தல் திணைக்கள அதிகாரி கேட்டுள்ளார்.

கடந்த கால யுத்தத்தினால் பல பொதுமக்கள் இடம்பெயர்ந்துள்ள நிலையில் வாக்காளர் பதிவியை மேற்கொள்ளாதுள்ளனர். அவர்கள், இந்தவேளையில் தமது பதிவினை மேற்கொள்ளுதல் சிறந்ததெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### விளையாட்டு மைதானத்துக்கு 20 இலட்சம் ரூபா ஒதுக்கீடு

முல்லைத்தீவு பொது விளையாட்டு மைதானம் புனரமைப்பதற்காக - 20 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டும், இதுவரை எவ்வித புனரமைப்பு வேலைகளும் செய்யப்படவில்லையெனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால், இந்த மாவட்டத்துக்கான பொது விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதில் தொடர்ந்தம் சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (122)

# லங்கா நிப்பொன் நிலையத்தின் புலமைப்பரிசில் கொடுப்பனவுகள்

யாழ். மாவட்ட பாடசாலைகளிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கான லங்கா நிப்பொன் கலாசார நிலையத்தினரால் - ஜூன், ஜூலை மாத புலமைப்பரிசிலுக்குரிய கொடுப்பனவுகள் கடந்த புதன்கிழமை முதல் யாழ். மத்திய கல்லூரியில் வைத்து வழங்கப்பட்டு வருகிறது.

பாடசாலை அதிபர் அல்லது பொறுப்பாசிரியர்கள் - மத்திய கல்லூரி அதிபரிடமிருந்து மாணவர்களுக்குரிய வவுச்சர் கொடுப்பனவுகளை, தாமதமின்றிப் பெற்றுக்கொள்ள ஆவனசெய்யுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

# இவ்வருட இறுதிக்குள் மேலும் 25 ஆயிரம் புதிய மின்னிணைப்புக்கள் வழங்கப்படும்!

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டுக்கு இந்த வருட இறுதிக்குள - மேலும் 25 ஆயிரம் இணைப்புக்கள் செய்து கொடுக்கப்படவுள்ளது.

அரசாங்கத்தின் சமாதான நடைமுறையின் பின்னர், யாழ். குடாநாட்டுக்கு 60 ஆயிரம் புதிய மின்சார இணைப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன. அத்துடன், யாழ். குடாநாட்டுக்கான உட்கட்டமைப்பு அபிவிருத்தியின் கீழ், மேலும் 25 ஆயிரம் மின்சார இணைப்புக்கள் இவ்வருட இறுதிக்குள் வழங்கப்படவுள்ளன.

சுன்னாகத்திலும், காங்கேசன்துறையிலும் 20 மற்றும் 15 மெகாவோட் மின்சாரத்தை வழங்கும் இரு ஜெனரேட்டர்கள் பொருத்தப்பட்டுள்ளன. எனினும், யாழ். குடாநாட்டின் முழுமையான மின்சாரதேவை 22 மெகாவோட்டாக இருப்பதால், 13 மெகாவோட் மின்சாரம் மேலதிகமாக இருப்பதாக, இலங்கை மின்சாரசபை கூறுகிறது.

இதேவேளை - யாழ். குடாநாட்டிலுள்ள மின் பாவனையாளர்கள் தமது கட்டணங்களைக் கிரமமாக செலுத்தி வருவதாகவும், மின்சார சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.




கே.நடனசபாபதி எழுதிய "பருவ மாணவர்" என்ற நூல் வெளியீட்டு விழாவில் கலந்துகொண்ட உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எஸ். இராசரத்தினம் உரையாற்றுவதையும், யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ பீடாதிபதி எம்.நடராசசுந்தரம், வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் ஆ.சிவசுவாமி, நூல் ஆசிரியர் கே.நடனசபாபதி ஆகியோரையும் படத்தில் காணலாம். (17)

### முல்லையில் எம்.எஸ்.எவ் கிளினிக்

(ஆழியவளை)

முல்லைத்தீவு வைத்தியசாலையில் ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாட்களில் பிரான்ஸ் எம்.எஸ்.எவ். மருத்துவக் குழுவினரால், கிளினிக்குகள் நடத்தப்படவுள்ளதாக மாவட்ட வைத்திய அதிகாரி ஜீ.சி.தர்மேந்திரா தெரிவித்துள்ளார்.

ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாட்களில் பற்சிகிச்சையும் நடைபெற்று வருவதாகவும், மாவட்ட வைத்திய அதிகாரி மேலும் தெரிவித்தார். (122)

### ஆசிரிய இடமாற்றத்துக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

மாவட்டங்களுக்கிடையிலான ஆசிரியர் இடமாற்றத்துக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இது தொடர்பான சுற்றுநிருபங்கள் மாகாணக்கல்வி அமைச்சினால், பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இடமாற்றம் கோரி விண்ணப்பிக்கும் ஆசிரியர்கள் - ஓகஸ்ட் 30 ஆம் திகதிக்கு முன்னர் வலயக் கல்விப் பணிமனையின் ஊடாக, விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறு மாகாணக் கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது. (122)

### அஞ்சல் அதிபர் பதவிக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளன

(வடமராட்சி கிழக்கு)

அஞ்சல் அதிபர் தரம் I பதவி வெற்றிடங்களைப் பூர்த்தி செய்யும் வகையில், தபால் மா அதிபர் இடமாற்ற சபையினரால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

மேற்படி தரம் I அஞ்சல் அதிபர் பதவிக்கு - தபால் மா அதிபர் இடமாற்ற சபையினரால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மேற்படி விண்ணப்பங்கள் இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பி வைக்கப்படவேண்டுமென, தபால் மா அதிபர் இடமாற்ற சபை அறிவித்துள்ளதாக தெரியவருகிறது.

# கண்ணிவெடி அகற்ற நவீனரக இயந்திரம்!

இராணுவத்தினரால் வன்னிப் பகுதியில் புதைக்கப்பட்ட பெருமளவு கண்ணிவெடிகள் - நவீன இயந்திரம் மூலம் அகற்றப்பட்டு வருகின்றது.

தொலைக்கட்டுப்பாட்டுச் சாதன மூலம் இயக்கப்படும் இந்த இயந்திரம் - நிலத்தில் புதைக்கப்பட்டுள்ள வெடிபொருட்களை, நிலத்திற்கு மேலாகக் கொண்டு வருவதுடன் வெடிக்கவும் வைக்கிறது. இந்த இயந்திர இயக்குநர்கள் எவரும் அருகிலிருந்து இயக்காது, தொலைவிலிருந்து இயக்குவதனால் உயிர் ஆபத்துக்கள் எதனையும் விளைவிக்காது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

வன்னிப் பகுதியில் இதுவரை காலமும் மனிதவலு மூலமே, பெருமளவு நிலப்பரப்புக்களில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டன. தற்போது இவ்வாறான நவீன இயந்திரம்- கண்ணிவெடிகளை அகற்றுவதற்குப் பயன்படுத்தப்படுகிறது.

இந்த இயந்திரம் மூலம் நேற்று முன்தினம் இயக்கச்சிப் பகுதியில் கண்ணிவெடியகற்றும் பணி மேற்கொள்ளப்பட்டதென தெரிவிக்கப்படுகிறது.

### பாடசாலை விடுமுறை

இரண்டாம் தவணைக்கான பாடசாலை விடுமுறை, எதிர்வரும் 8 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கவுள்ளது.

ஆனால், க.பொ.த உயர்தரப் பரீட்சைகள் நடைபெற்ற பாடசாலைகள் யாவும் எதிர்வரும் 15 ஆம் திகதியே விடுமுறைக்காக மூடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

க.பொ.த. உயர்தரப் பரீட்சைகள் நடைபெற்றபோது, குறிப்பிட்ட பாடசாலைகளை நடாத்த முடியாமல் இருந்தமையினாலேயே, அப்பாடசாலைகளுக்கான விடுமுறைகள் பிறபோட்டமை குறிப்பிடத்தக்கது.

# சஞ்சீவன் ஞாபகார்த்த தின மென்பந்து கிரிக்கெட் போட்டி

## நடத்துவதற்கு ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

2000 ஆம் ஆண்டு இராணுவத்தால் சுட்டுக்கொல்லப்பட்ட யாழ். இந்துக் கல்லூரி மாணவன் சோ.சஞ்சீவன் நினைவாக, நடத்தப்படும் மென்பந்து கிரிக்கெட் போட்டி தொடர்பான கலந்துரையாடல் - நேற்றுமுன்தினம் காலை 10.00 மணிக்கு தமிழ்க் கல்வி மேம்பாட்டுப் பேரவை யாழ். அலுவலகத்தில், தமிழீழ மாணவர் அமைப்பு பொறுப்பாளர் தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் தமிழீழ கல்விக் கழக யாழ். மாவட்ட பொறுப்பாளர், யாழ். மாவட்டத்தின் கல்வி வலயங்களைச் சார்ந்த உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது, போட்டி தொடர்பான பல முக்கிய விடயங்கள் கலந்துரையாடப்பட்டதுடன், போட்டிக்கான விண்ணப்பங்களும் பாடசாலைகளிலிருந்து கோரப்பட்டுள்ளன.

வாழ்க வளமுடன்

HAPPY BIRTHDAY

ஆறாவது அகவையில்



பெயர் : சி.பிரவீனா
முகவரி: காஞ்சூரை, சமரபாகு, வல்வெட்டித்துறை..

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :------------------------------
முகவரி :------------------------------
பிறந்த ஆண்டு:------------------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.
------------------
பெற்றோர் ஒப்பம்

# கணினிக் கல்வியில் திறமையான சான்றிதழ்களைப் பெறுவது எப்படி?

உழைப்போம் உயர்வோம்! தொழில் மலர்



*(சென்றவாரத் தொடர்ச்சி)*

கணினி வலைப்பின்னல் வைத்திருக்கும் ஒவ்வொரு நிறுவனமும், கணினித் தொழில்நுட்பத்தை உருவாக்கும் கம்பனிகளின் இந்த தொழில்நுட்ப நெருக்குதலிற்குத் தினமும் பலியாகிய வண்ணம் உள்ளன.

முன்னொரு காலத்தில் மனிதன் தனக்குத் தேவையென்ற ஒன்றையே புதிய உத்திகளைப் பாவித்துக் கண்டுபிடித்தான். அப்போது தொழில்நுட்பத்தை ஒரு சமுதாயம் நிர்ணயித்தது. ஆனால், இன்று நான் விரும்பியோ, விரும்பாமலோ நாம் எந்த வகையான தொழில்நுட்பத்தை உபயோகிக்கப் போகிறோம் என்பதை, தொழில்நுட்பத்தைக் கண்டுபிடித்து அறிமுகப்படுத்தும் கம்பனிகளே நிர்ணயிக்கின்றன.

இப்படியாக, காலச்சக்கரத்தின் சுழற்சியில் தலைகீழாகியிருக்கும் கணினி வலைப்பின்னல் **(Computer Net Working)** உலகைப் பல பெரிய நிறுவனங்கள் இன்று ஆக்கிரமித்துள்ளன. அவற்றிற்கு உதாரணமாக **Micro Soft, Cisco Novell Vortel, Luceent Fuiitsu NBM, Sun Micro System** போன்ற நிறுவனங்களைக் கூறலாம்.

இவற்றில் நாம் ஏற்கனவே **Micro Soft Sun Micro System** நிறுவனங்களின் சான்றிதழ்கள் பற்றிப் பார்ப்போம். ஆனால், இன்று **IP (Internet Protocol)** தொழில் கல்விச் சான்றிதழே **Computer Net Work** இல் இன்று சந்தையில் இருக்கும் மிகவும் தரமான, பிரபல்யமான கல்விச்சான்றிதழ் ஆகும். அவையானவன -

1. **CCIE - Cisco Certified Internet working Expert.**
2. **CCNP - Cisco Certified Network Professional**

என்பவையாகும்.

இதுவரை நாம் **On Line** பரீட்சைகளையே பார்த்தோம். இனி நாம் சர்வதேச தரத்தில் பரீட்சை மண்டத்தில் நடைபெறும் பரீட்சைகள் பற்றிப் பார்ப்போம். இவற்றில் இன்று பின்வரும் இரண்டு பரீட்சைகளுமே முக்கிய இடத்தினைப் பெறுகின்றன.

1. **BCS - British Computer Society.**
2. **ACS - Australian Computer Society.**

❖ **British Computer Society (BCS)**

இன்றைய இளைஞர்கள், யுவதிகள் போட்டி போட்டுக் கொண்டு செல்லும் கணக்கியல் சார்ந்த சர்வதேச தரப் பரீட்சையான **CIMA** பிரபல்யமாகக் காணப்படுவது போன்று, கணினி சார்ந்த சர்வதேச தரம் **(International Exam)** வாய்ந்த பரீட்சையாக **BCS** திகழ்கிறது. இது பின்வரும் மூன்று நிலைகளில் நடைபெறுகின்றன.

1. **Certificate**
2. **Diploma**
3. **Professional Graduate Diploma**

இவை பற்றி இனி நாம் விரிவாக ஆராய்வோம்.

❖ **Certified**

இந்தத் தகைமையைப் பெறவேண்டுமாயின், மூன்று கட்டாய பாடங்களில் **(Copulsory modules)** தோற்றிச் சித்தியடையவேண்டும்.

**1.1 Information System**
**1.2 Soft ware Development**
**1.3 Technology**

இந்த மூன்று கட்டாய பாடப் பரீட்சை வினாத்தாள்களை தலா இரண்டு மணித்தியாலங்கள் வீதம் செய்து முடிக்க வேண்டும். இப்பரீட்சைக்குரிய கட்டணம் பின்வரும் வழிகளில் அறவிடப்படுகின்றது.

1. அங்கத்தவர் சந்தா **(Membership fees)** செலுத்தப்பட்டவராகக் காணப்பட்டால், ஒவ்வொரு பாடத்திற்குமுரிய பரீட்சைக் கட்டணமாக, 35 ஸ்ரேலிங் பவுண்ஸ் செலுத்த வேண்டும்.
2. அங்கத்தவர் அல்லாதவர்கள் **(Non - Membership)** ஒவ்வொரு பாடத்திற்கும் 51 ஸ்ரேலிங் பவுண்ஸ் செலுத்தவேண்டும்.

இதில் அங்கத்தவராகச் சேருவதற்கு, ஒருவர் ஆண்டுச் சந்தாவாக 49 ஸ்ரேலிங் பவுண்ஸ் செலுத்தவேண்டும். அங்கத்தவர்களாக இருப்பவர்களுக்குப் பல சலுகைகள் செய்து கொடுக்கப்படுகின்றன. அதாவது, இலவச கணினிச் சஞ்சிகை, **BSC** இன் **On Line** நூலகத்தினைப் பயன்படுத்தும் வசதி, இலவச மின்னஞ்சல் முகவரி எனப் பல சலுகைகள் இந்த அமைப்பால் கொடுக்கப்படும்.

❖ **Diploma**

இத்தகைமையினைப் பெறுவதற்கு **Professional Issues Information System Practise** என்ற கட்டாய வினாத்தாளையும், மற்றைய வினாத்தாள்களில் நாம் விரும்பிய **(Optional)** வினாத்தாள் மூன்றில் தோற்றிச் சித்தியடைதல் வேண்டும். அவை யாவன-

01. **Architecture**
02. **Computer networks**
03. **Data base systems**
04. **Multimedia**
05. **Object oriented Programing**
06. **Project management**
07. **Service management**
08. **Software Development**
09. **Systems Analysis**
10. **Systems Design**
11. **Systems Software.**

இப்பரீட்சைகள் யாவும் இரண்டு மணித்தியாலங்களைக் கொண்டதாகும். பரீட்சைக் கட்டணம் அங்கத்தவர்களிற்கு 35 ஸ்ரேலிங் பவுண்ஸ"ம், அங்கத்தவர்களிற்கு 51 ஸ்ரேலிங் பவுண்ஸ"ம் அறவிடப்படுகின்றது.

❖ **Professional Graduate Diploma**

இப்பரீட்சையில் தோற்றி, சித்தியெய்தியவர்கள் பல்கலைக் கழகங்களால் வழங்கப்படும் கணினிப் பட்டத்திற்கு சமனானதாகக் கருதப்படுவர். எனவே, நாம் இப்பரீட்சையில் சித்தியெய்த வேண்டுமாயின், கீழ்வரும் வினாத்தாள்களில் கட்டாயமாக நான்கில் சித்தியடைந்திருக்கவேண்டும்.

1. **Advanced Data base**
2. **Management systems**
3. **Computer Graphics.**
4. **Computer Services management**
5. **Software Engineering**
6. **Net work information Systems.**

இப்பரீட்சைகள் ஒவ்வொன்றும் மூன்று மணித்தியாலங்களினைக் கொண்டவை. இதற்கான கட்டணமாக அங்கத்தவர்களிடமிருந்து ஒரு வினாத்தாளிற்கு 65 ஸ்ரேலிங் பவுண்ஸ் வீதமும், அங்கத்தவர் அல்லாதோரிற்கு ஒரு வினாத்தாளிற்கு 95 ஸ்ரேலிங் பவுண்ஸ் வீதமும் அறவிடப்படுகின்றது.

**Diploma** என்ற தகைமையைப் பெற்றவர்கள் **Project** ஒன்றைச் செய்து கொடுப்பதன் மூலம், **Diploma** இல் **Professional Project** என்ற தகைமையைப் பெறமுடியும்.

இப்பரீட்சை ஆண்டுதோறும் ஏப்ரல், ஒக்ரோபர் மாதங்களில் நடைபெறுகின்றன. **Certificate** என்ற தகைமைக்குரிய பரீட்சை மட்டுமே, ஒக்ரோபர் மாதத்தில் நடாத்தப்படுகின்றன. ஏப்ரலில்தான் **BCS** பரீட்சைகள் அனைத்தும் நடைபெறுகின்றன. ஒவ்வொரு வினாத்தாளிற்கும் குறைந்தது 40% மான புள்ளிகளைப் பெற்றால் மட்டுமே சித்தியடைந்தவர்களாகக் கருதப்படுவர்.

இலங்கை நாணயப்படி **BCS** இல் காணப்படும் மூன்று தகைமையையும் பெறுவதற்கு அண்ணளவாக ஒரு இலட்சம் ரூபா பரீட்சைக் கட்டணமாகச் செலுத்தப்படவேண்டும்.

இப்பரீடசை பற்றி மேலும் விபரமாக அறிய ஆவலாக உள்ளீர்களா? அப்படியாயின் பின்வரும் இணைய முகவரியினையோ,

**WWW.bcs. org**
**WWW.bcs. org.UK/ exam. htm** அல்லது மின்னஞ்சல் முகவரியினையோ,

**education Uk @ british council. lk** அல்லது அஞ்சல் முகவரியினையோ,

**The British Council**
**No 49, Alfred House Gardens,**
**Colombo - 03**
தொடர்பு கொள்ளவும்.

*(தொடரும்)*

**சேனாதிராசா ஜெயானந்தன்**
இடைவரவு விரிவுரையாளர் (computer)
யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

# தொழில் வங்கி



| நிறுவனம் | வெளிநாட்டு வேலைவாய்ப்பு அடிப்படையாகக் கொண்ட நிறுவனம் (B.O.I அங்கீகரிக்கப்பட்டது) | மொறட்டுவ பல்கலைக்கழகம் இலங்கை | சமூக நலன்புரி அமைச்சின் சமூக அபிவிருத்தி நிறுவனம் | கெயர் |
|---|---|---|---|---|
| வெற்றிடமாகவுள்ள பதவிகள் | பதவி - 1<br>உதவி நிறைவேற்று அதிகாரி (ஆண்)<br>பதவி - 2<br>வியாபார அபிவிருத்தி நிறைவேற்று அதிகாரி (ஆண் / பெண்)<br>பதவி - 3<br>மனிதவள நிர்வாக நிறைவேற்று அதிகாரி (ஆண் / பெண்)<br>பதவி - 4<br>கணக்காளர் நிறைவேற்று அதிகாரி (ஆண் / பெண்)<br>பதவி - 5<br>செயலாளர் (பெண்) | குடிசார் எந்திரவியல் துறையில் -<br>சிரேஷ்ட விரிவரையாளர் தரம் I<br>சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II<br>முகாமைத்துவ தொழில்நுட்பத்துறையில் -<br>சிரேஷ்ட விரிவரையாளர் தரம் I<br>சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II | உதவி விரிவுரையாளர் (தமிழ்மொழி) | துறைசார் இணைப்பாளர் நிறுவன அபிவிருத்தியும், ஒருங்கமைப்பைப் பலப்படுத்தலும். |
| அடிப்படைத் தகுதி | 1. சேவை அல்லது இவை சம்பந்தப்பட்ட நிறுவனத்தில் முன்னனுபவம், அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட பல்லைக்கழகப் பட்டம் அல்லது டிப்ளோமா சான்றிதழ்.<br>30 வயதிற்கு மேற்பட்டிருத்தல் வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை.<br>2. வர்த்தகம் அல்லது இவை சம்பந்தப்பட்ட துறைகளல் அங்கீகரிக்கப்பட்ட பல்லைக்கழகப் பட்டம் அல்லது டிப்ளோமா பட்டம். கணினி சம்பந்தப்பட்ட அறிவு அவசியம்.<br>3. மனிதவள முகாமைத்துவம் அல்லது அவை சார்ந்த துறைகளில் பட்டம் பெற்றிருத்தல், இலங்கை தொழிலாளர் சட்டம் தெரிந்திருத்தல் வேண்டும்.<br>4. கணக்கியல் அல்லது இவை சம்பந்தப்பட்ட துறைகளில் அங்கீகரிக்கப்பட்ட பட்டம் டிப்ளோமா பட்டத்துடன், இரண்டு வருட அனுபவம்.<br>5. செயலாளர் பகுதிக்குரிய தகுதியுடன் மூன்று வருட அனுபவம். | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பொறியியல் பட்டம் | அங்கீகரிக்கப்பட்ட சமூக நிறுவனமொன்றில் முதலாவது / இரண்டாவது மேற்பிரிவுகளை சமூக வேலைகள் சம்பந்தப்பட்ட பட்டம்.<br>அல்லது<br>அங்கீகரிக்கப்பட்ட பல்லைக்கழக சமூகவிஞ்ஞான பட்டத்துடன் சமூக நலன், சமூக அபிவிருத்தி பற்றிய இரணடு வருட அனுபவம்<br>அல்லது<br>அங்கீகரிக்கப்பட்ட பல்லைக்கழக சமூக விஞ்ஞானப்பட்டத்துடன் பட்டப்பின் படிப்புப்பட்டம். சமூகநலன் சம்பந்தப்பட்ட டிப்ளோமா (2 வருடத்திற்கு குறையாத படிப்பு)<br>21-45 வயதிற்கு இடைப்பட்டவர். பொதுநிர்வாக சேவையில் உள்ளவர்களுக்கு மேல் வயதெல்லை கிடையாது. | பட்டதாரிகள் ஐந்து வருடத்துக்குக்குறையாத அனுபவம் பெற்ற சமூக விஞ்ஞான டிப்ளோமா பட்டம்.<br>சிங்கள/ஆங்கில மொழிகளில் தகைமை பெற்றிருத்தல் வேண்டும். |
| விண்ணப்ப முடிவு திகதி | 18.08.2003 | 18.08.2003 | 15.08.2003 | 13.08.2003 |

தொழில் வங்கி தொடர்பான மேலதிக தகவல்களைப்பெற விரும்புவோர் - 'நமது ஈழநாடு' அலுவலகத்தில் நேரில் வந்து பார்வையிடலாம்.

# வேளாண்மையில் தரமான விதைகள்;

(சென்றவாரத் தொடர்ச்சி)

பல கட்டுப்பாடுகளினால் (Limitations) இலங்கை உட்பட, பல அயனமண்டல நாடுகளில் விதை உற்பத்திகளின் விரிவாக்கல் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இதில் மிகப்பெரிய பிரச்சினை - சிறந்த தரம்வாய்ந்த விதைகளோடு சம்பந்தப்பட்ட விடயமாகும்.

விதைகள் முதிர்ச்சியடையும் சமயங்களிலும் (Maturity Time), அறுவடைக்கு முன்னரும் (Pre - harvest) ஏற்படும் மோசமான காலநிலை (Bad weather) தரம்வாய்ந்த விதைகளைப் பெறுவதில் சிரமத்தை ஏற்படுத்துகிறது. உஷ்ணம்கூடிய வறண்ட காலநிலையும், மண்ணில் காணப்படும் குறைந்த அல்லது அதிக ஈரத்தன்மையும், விதைகள் முதிர்ச்சியடையும் சமயத்திலும், விதை உண்டாகும் சமயத்திலும் ஏற்படுவதால், குறைந்த தரமுடைய விதைகளை உருவாக்குகிறது.

விதைகளின் உற்பத்தியிலும், தரத்திலும் குறிப்பிடத்தக்களவு குறைவுகள் ஏற்படுவதற்குக் காரணம் - விதை உண்டாகும்போது, தாவரங்கள் போஷாக்குப் (Nutrient) பெறும் காலகட்டத்தில் காணப்படும் குறுகியகால குறைந்த ஈரலிப்புத் தாக்கத்தினால் ஏற்படும் தன்மையாக இருக்கலாம். ஆகவே, இக்காலகட்டத்தில் பயிர்கள் குறுகிய காலத்திற்குக்கூட, ஈரலிப்புத்தன்மையால் பாதிக்கப்படாமல் இருப்பது மிக அவசியமாகும். இவ்வண்ணம் காணப்படும் சூழ்நிலையில், அவரைப் பயிர்கள் (Legumes) மிகவும் அதிகம் பாதிக்கப்படக்கூடிய தன்மையை உடையன.

சிறந்த உயர்தரத்தைக் கொண்ட விதை உற்பத்திக்கு- விதைகள் முதிர்ச்சி அடையும்போது, காணப்படும் காலநிலை முக்கியமானதாகும். விசேடமாக - ஈரலிப்பற்ற வறட்சியான காலநிலை சிறந்தது ஆகும். விதைகளின் தரத்தை நிர்ணயிக்கும் காரணிகளாவன - விதைகள் முதிர்ச்சியடையும் சமயங்களில் காணப்படும் மிதவெப்பநிலை, காலக்காற்று, கூடிய உயர் சாரீரப்பதனுமாகும்.

சிறந்த காலநிலையுள்ள சமயங்களில் விதைகள் முதிர்ச்சியுறும் காலம் அமைவதற்கேதுவான பயிர்ச்செய்கை நிலை நிறுத்தப்படவேண்டும். இதன்படி, இலங்கையின் உலர் வலயங்களில், கோடைகாலங்களில் வைகாசி - ஆனி மாதங்களிலும், மாரிகாலங்களில் ஐப்பசி - கார்த்திகை மாதங்களிலும் பயிர்ச்செய்கை தொடங்குவது பொருத்தமான காலங்களாகும் எனக் கூறலாம்.

அறுவடைக்கான ஆகக்கூடிய முதிர்ச்சியின் பின் ஏற்படும் காலதாமதம், விதைகளைக் கூடிய காலம் களத்தில் வைத்திருத்தல், கூடுதலான களதட்ப வெப்பநிலைகளுக்குத் தீவிரமாக உட்படுத்தப்படுதல், விதைகளின் தரத்தைக் குறைப்பதற்குக் காரணமாகின்றது.

விதைகள் முழுமையாக முதிர்ச்சியடைந்திருப்பதும் (Full maturity), போதியளவு உலர்த்தப்பட்டிருப்பதுமே (Adequately dried), அறுவடைக்கான முதிர்ச்சிக் (Harvest maturity) காலமாகும். உற்பத்தியில் இழப்பைத்தரும், சூடான காலநிலை

## உற்பத்தி, இலாபத்தில் கூடிய பங்கு

களில் (Hot weather) ஏற்படும் விதைகள் "கொட்டுதல்" அறுவடையில் ஏற்படும் தாமதத்தினால் ஏற்படும் நிகழ்வேயாகும்.

மழைக்காலங்களில் பெறப்படும் விதைகளின் தரத்தை மேமபடுத்தவேண்டுமாயின், (விசேடமாக அவரைப்பயிர் விதைகள் - Legume seeds), சரீர சாஸ்திர முதிர்ச்சியின் (Physiological maturity) போது அறுவடை செய்யப்பட்டு, நான்கு புறமும் திறந்திருக்கத்தக்க வகையில் காற்றோட்டமுள்ள ஒரு கொட்டிலில் உலர வைக்கப்படவேண்டும்.

இம்முறையில் பெறப்பட்ட விதைகள், அறுவடை முதிர்ச்சியின்போது, பெறப்பட்ட விதைகளின் தரத்தைவிடவும் உயர்வானவை என்று நிரூபிக்கப்பட்டிருக்கின்றது. பயிர்களில் காணப்படும் சரீர சாஸ்திர முதிர்ச்சித் தன்மையானது, அதன் வெளிப்புறத் தோற்றத்தை வைத்து, இலகுவாக அடையாளம் காணலாம்.

இதே காலப்பகுதியில்தான் விதைகள் கூடியளவு உலர்ந்த பொருட்களையும் (dry matter), கூடிய அளவிலான முளைதிறன் தகுதியையும் (Germination ability) பெறுகின்றது.

எல்லா வகையான களஞ்சியப்படுத்தல் முறைகளுக்கும் தரம் குறைந்த விதைகளைவிட, தரங்கூடிய விதைகளே உயிர்ப்புத் தன்மையை (Viability) கூடிய காலம் வைத்திருக்கும் ஆற்றலுடையவை என அறியப்பட்டுள்ளது.

விதைகளில் காணப்படும் வீரியக் குறைவு (Low vigour) நல்ல சூழ்நிலைகளில்கூட முளைத்தலில் குறைந்த வீதத்தையே காட்டி நிற்கின்றது.

பயிர் செய்யும் சூழலில் பல பங்கசுக்கள் - தரம் வாய்ந்த விதைகளைத் தாக்கி, அதன் உற்பத்தியில் குறைபாட்டை உண்டாக்குகின்றது. விதை உருவாக்கும் போதும், முதிர்ச்சியின்போதும் பங்கசு நாசினிகள் இலைத் தொகுதியின் மீது பாவிக்கப்படுவதால் (உரிய பங்கசு அழிப்புகளால்), குறிப்பிடத்தக்க அளவில் விதைகள் உற்பத்தியாகும் சுவாத்தியத்தை மேம்படுத்துவதுடன், விதைகளின் தரத்தையும் உயர்ந்த நிலைகளில் வைக்கவும், களஞ்சியப்படுத்துவதற்கும் சிறந்ததாக அமைகின்றது.

விதைகள் உருவாகும்போதும், முதிர்ச்சியின்போதும் ஏற்படும் மோசமான காலநிலைகளில் இத்தொழில்நுட்பம் மிகவும் பொருத்தமானதாக அமைகிறது.

பல்வேறு முதலீடுகளிலும், திறமைகளிலும் ஈடுபாட்டைக் கொண்டிருக்கும் மனிதனின் வாழ்க்கைக்கு இதயம்போல் அமைந்துள்ள இவ்விதைக் கைத்தொழிலானது, உலகின் மிக முக்கியமானவற்றில் ஒன்றாகக் கருதப்படுகிறது. பல்வேறு துறைகளில் கடமையாற்றிக் கொண்டிருக்கும் விஞ்ஞானிகளின் சேவை - இவ்விதைக் கைத்தொழிலுக்கு அவசியமாகின்றது.

இன (பிரிவு) ஆய்வாளர்களும் (Geneticists); தாவர உற்பத்தியாளர்களும் (Plant Breeders) பிரதான உணவு, உடை உற்பத்தியில் ஈடுபாடுள்ள சிறந்த பலாபலன்களைக் கொடுக்கக்கூடிய விதைகளைத் தேர்வுசெய்து, அதனை அபிவிருத்தி செய்வதற்கும் வேண்டப்பட்டுள்ளார்கள்.

(தொடரும்)

**கலாநிதி வை.அருள்நந்தி**
மாணவர் பகுதி, விவசாய பீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

# சாதாரண கூலித்தொழிலாளியின் விடாமுயற்சி

**ஒரு முதலாளியின் கீழ் - சாதாரண கூலித்தொழிலாளியாக வேலைசெய்து - நாளாந்த வாழ்க்கையை நடத்தி வந்தாலும்கூட - செய்யும் தொழிலை மதித்து, அதில் விசுவாசம் வைத்து, நேர்மை, விடாமுயற்சி, நம்பிக்கை என்பவற்றால், யாழ்.குடாநாட்டின் வர்த்தக நிறுவனங்களுக்குப் புதியதொரு அத்தியாயத்தைப் படைத்து, முத்திரை பதித்திருக்கின்ற Annai Nagaa Food City இன் பங்காளரான குழந்தைவேலுடனான சந்திப்பு இது.**


குழந்தைவேலு

**உங்களுடைய தொழில் விருத்திக்கான ஆரம்பகால முயற்சிகள் பற்றிக் கூறுங்கள்?**

எனது 20 ஆவது வயதில் படிப்பை முடித்துவிட்டு - ஒரு முதலாளியின் கீழ், சாதாரண ஊழியராக இணைந்து கொண்டேன. சாதாரண தொழிலாளியாக இருந்த நான், காலப்போக்கில் காசாளராக மாறி, பின்னர் நிர்வாகப் பணியாளராக உயர்வடைந்தேன்.

அதன் பின்னர் நானும், என்னுடன் வேலை செய்து வந்த சக நண்பர்களுமாகச் சேர்ந்து, கொழும்பு நகர்ப்புறத்தின் ஒரு ஓரத்தில் சிறியதொரு அங்காடியை வாடகைக்கு எடுத்து, சிறியளவில் வியாபாரம் செய்துகொண்டு, களஞ்சிய வசதியைக்கொண்ட இன்னொரு அங்காடியையும் எடுத்து, குறைந்த விலையிலான பொருட்களை (உதாரணம்- உப்பு) கூடியளவில் கொள்வனவு செய்து, களஞ்சியப்படுத்தி வைத்துப் பெரிய பெரிய கடைகளுக்கு மொத்தமாக விற்பனை செய்து வந்தேன்.

காலப்போக்கில் ஒரு கடையை, பங்காளர்களாக இருந்த நண்பர்களிடம் கொடுத்துவிட்டு - நான் பிரிந்து, எனது சகோதரர்களுடன் இணைந்து கொழும்பில் ஒரு கடையை அமைத்ததுடன், யாழ்ப்பாணத்திலும் ஒரு மொத்த விற்பனைக்குரிய கடையை அமைத்து, மொத்த வியாபாரம் செய்துவந்தோம்.

இவ்வாறு தொழிலில் ஒரு இடத்தைப் பிடித்து காலூன்றி நின்ற வேளையில்தான், கொழும்பில் 1983 ஆம் ஆண்டு இனக்கலவரம் வெடித்தது. அப்போது அங்கிருந்த தமிழர்களின் பல. கடைகள் தீக்கிரையாக்கப்பட்டன. அந்த நேரத்தில் எமது முதலீடுகள் அனைத்தும் அழிவடைந்த நிலையில், கடனாளியாகவும் மாறவேண்டிவந்துவிட்டது.

ஆனாலும், யாழ்ப்பாணத்திலுள்ள பல கூட்டுறவுக் கடைகளிலும், தனியார் கடைகளிலும் தருமதியாக இருந்த பணத்தை வசூலித்து, கொழும்பிலுள்ள கடன்களில் அரைவாசியை கொடுத்துத் தீர்த்துவிட்டு, சாவகச்சேரியில் கடையை ஆரம்பித்து, யாழ்ப்பாணத்துக்கு வந்து கடைபோட்டு, இங்கும் பல இடப்பெயர்வுகளையும், முதல் இழப்புக்களையும் சந்தித்தாலும- தொழிலில் எனக்கிருந்த விசுவாசமும் ஊழியர்கள், வர்த்தகர்கள் மற்றும் மக்களிடம் இருந்த நன்மதிப்புமே, இன்று என்னை ஒரு முதலாளியாக்கியது.



**போட்டி வியாபார நிறுவனங்களுக்கு மத்தியில் இப்படியான ஒரு பல்பொருள் அங்காடியை நடாத்தவேண்டும் என்ற எண்ணம் ஏன் உருவானது?**

தென்பகுதியில் உள்ளது போன்ற ஒரு வியாபார நிலையம் யாழ்ப்பாணத்தில் இல்லை. இங்குள்ள மக்கள் தங்களுக்குத் தேவையான பொருட்களைக் கொள்வனவுசெய்ய வேண்டுமானால், ஒவ்வொரு கடையாக ஏறி இறங்குகிறார்கள். அதனால், இப்படியான ஒரு வசதியை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம், அவர்கள் குறிப்பிட்ட நேரத்திற்குள் தமக்குத் தேவையான எல்லா விதமான பொருட்களையும் கொள்வனவு செய்யலாம் என்ற காரணத்தால்தான், யாழ்.குடா நாட்டு மக்களுக்கும் இந்த வசதிவாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்துள்ளோம். அதைவிட, இங்குள்ள பல இளைஞர்கள், யுவதிகளுக்கு - இதன்மூலமாக வேலை வாய்ப்புக்களை வழங்கவேண்டும் என்ற ஆசையும் இதற்கொரு காரணம்.

**மக்கள் மத்தியில் என்னமாதிரியான வரவேற்புகள் இதற்குக் கிடைக்கின்றது?**

## தொழில் முயற்சியின் புதியதோர் அத்தியாயமானது

கூடுதலாக அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் பணியாற்றுபவர்களிடம் இருந்தும், பொதுமக்களிடமிருந்தும் இதற்கு நல்ல வரவேற்புக் கிடைத்திருக்கின்றது. வேலை முடிய இங்குவந்து, தங்களுக்குத் தினசரி தேவையான பொருட்களையும் தாங்களே தெரிவுசெய்துகொண்டு செல்லக்கூடியதாக இருக்கின்றது என வாடிக்கையாளர்கள் கூறுகின்றார்கள்.

பின்னர் - அவர்கள் வெளியில் சென்று அதைப்பற்றி விளங்கப்படுத்த ஏனைய மக்களும் புரிந்துகொண்டு, இப்ப நிறையச் சனங்கள் வந்து பொருட்களை வாங்கிக்கொண்டு செல்கிறார்கள்.

வெளிநாடுகளிலிருந்து தாயகத்திலுள்ள உறவினர்களைப் பார்க்க வந்துகொண்டிருக்கும், குறிப்பாக யாழ்ப்பாணத்திற்கு வந்துகொணடிருக்கின்றவர்களும், அரச சார்பற்ற நிறுவனங்களில் பணியாற்றுகின்ற வெளிநாட்டவர்களும் இங்குவந்து, பொருட்களைக் கொள்வனவு செய்கிறார்கள்.

வெளிநாடுகளிலிருந்து தங்கள் உறவுகளைச் சந்திப்பதற்காக இங்கு வந்திருக்கின்றவர்கள், எமது Supper market இற்கு வரும்போது சொல்வார்கள் - யாழ்ப்பாணத்திலும் இப்படியான ஒரு கடையிருப்பது வியப்பாக இருக்கிறது. நாங்கள் அங்கிருந்து கொண்டு வருகின்ற Chocolate மற்றும் சகல பொருட்களும் இங்கேயே கிடைக்கின்றன. ஆனபடியால், அங்கிருந்து எதையும் காவிக்கொண்டு வரவேண்டிய அவசியம் இல்லையென்று கூறுகிறார்கள்.

தரைவழிப்பாதை திறந்ததுதான் எங்களுடைய இந்தத் தொழிலைச் சிறப்பாக நடத்தக் காரணமாகிறது. தரைவழிப் பாதையொன்று இல்லாவிட்டால், இந்த மாதிரியான ஒரு தொழிலைச் செய்யமுடியாதிருந்திருக்கும்.

சந்திப்பு: உஷா, கலானந்தி

# குடாநாட்டு சந்தை நிலவரம்

| பொருட்கள் | சங்கானை | சுன்னாகம் | சாவகச்சேரி | நெல்லியடி | யாழ்ப்பாணம் | மருதனார்மடம் | திருநெல்வேலி |
|---|---|---|---|---|---|---|---|
| பயிற்றங்காய் | 40/= | 40/= | 40/= | 50/= | 60/= | 40/= | 50/= |
| உருளைக்கிழங்கு | 60/= | 60/= | 70/= | 70/= | 65/= | 60/= | 65/= |
| கத்தரிக்காய் | 40/= | 40/= | 40/= | 50/= | 60/= | 40/= | 45/= |
| பாகற்காய் | 40/= | 30/= | 40/= | 40/= | 50/= | 30/= | 40/= |
| வெண்டிக்காய் | 10/= | 10/= | 20/= | 40/= | 30/= | 15/= | 15/= |
| கரட் | 60/= | 30/= | 40/= | 40/= | 60/= | 60/= | 50/= |
| பீற்றூட் | 20/= | 15/= | 20/= | 30/= | 35/= | 15/= | 25/= |
| முருங்கைக்காய் | 60/= | 55/= | 60/= | 30/= | 90/= | 60/= | 70/= |
| வெங்காயம் | 20/= | 20/= | 30/= | 25/= | 30/= | 25/= | 25/= |
| பச்சை மிளகாய் | 30/= | 40/= | 50/= | 50/= | 50/= | 60/= | 50/= |

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com


**சிந்தனைக்கு**

*இழைத்தது இகவாமைச் சாவாரை யாரே*
*பிழைத்தது ஒறுக்கிற் பவர்.*

*- திருக்குறள்.*

# நமது நோக்கு

## புரிந்துகொண்ட நியாயமா?

'முதுகெலும்பில்லாத சிங்கள அரசியல்வாதிகள் இன்னும் எங்கள் குருதியின் மீது நாடகம் நடத்திக் கொண்டிருந்தால், எமது ஆயுதங்களை தெற்குக்கு எதிராகத் திருப்புவோம்' - இந்த எச்சரிக்கை எங்கிருந்து கிளம்பியது என்று அதிர்ச்சியடையத் தேவையில்லை.

'இராணுவ வீரர்களின் குரல்' என்ற அமைப்பே இந்தத் துண்டுப்பிரசுரத்தை வெளியிட்டிருக்கிறது. படைமுகாம்களுக்கும், முக்கிய இராணுவ அதிகாரிகளுக்கும் இது அனுப்பிவைக்கப்பட்டிருக்கிறது.

'நாங்கள் இங்கு என்ன செய்து கொண்டிருக்கிறோம்' என்ற தலைப்பிலான இந்தத் துண்டுப்பிரசுரத்தின் உள்ளடக்கம் - யதார்த்தத்தை விளக்குவதாக அமைந்திருக்கிறது.

இனப்பிரச்சினையின் தோற்றுவாயையும், அது எப்படி சிங்கள பௌத்த ஆட்சியாளர்களால் கட்டி வளர்க்கப்பட்டதென்பதையும் கூறும் இப்பிரசுரம்,

நியாயமான உரிமைகள் கேட்ட தமிழர்கள், இனப்படுகொலைகளின் பெயரால் குழிதோண்டிப் புதைக்கப்பட்ட வரலாற்றையும் கொண்டிருக்கிறது.

ஆட்சிபீடத்திலுள்ளவர்கள் - தமது ஆட்சியைத் தக்கவைத்துக் கொள்வதற்காக, மேற்கொண்ட இந்தச் சதிமுயற்சி, இருபதாண்டு கால குருதி வழியும் யுத்தத்துக்குக் காரணமாக அமைந்துள்ளது.

இதனைத் தெளிவாக படம்பிடித்துக் காட்டும் படையினரின் இந்தத் துண்டுப்பிரசுரம், சிங்கள ஆட்சியாளர்கள் - தமது லாபத்துக்காக குருதியில் நாடகமாடி வருவதாகவும் குற்றஞ்சாட்டியிருக்கிறது.

இனப்பிரச்சினைக்குக் காரணமான, தமிழ்மக்கள் மீதான, ஆட்சியாளரின் அராஜகங்களுக்கு துணைநின்ற ஒரு தரப்பினரிடமிருந்தே இந்த உணர்வு தோன்றியிருக்கிறது.

இந்த நிலையானது, நிச்சயம் எதிர்பார்க்கப்பட்டதொன்றாகவே இருக்கமுடியும். அராஜகத்துக்குத் துணைபோகும் சக்திகளின் ஏவலுக்குச் செயற்படுபவர்கள் எவருமே நீண்டகாலத்திற்கு அவ்வாறு இருக்கமாட்டார்கள்.

யுத்தத்திற்கும், இதன் கோரத் தாக்கங்களுக்கும் காரணமாக இருந்த படையினர், இவ்வாறு தமது நிலையை உணர்ந்திருக்கின்றமை வரவேற்கத்தக்கதொன்று.

தமிழ்மக்களின் போராட்ட நியாயங்களை இவர்கள் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியாவிட்டாலும் பரவாயில்லை. ஆனால் சிங்கள ஆட்சியாளர்கள் தமிழ்மக்களை எவ்வாறு அழிப்பதற்கு நடவடிக்கை எடுத்தார்கள் என்பதையும் -

இந்தப் படுகொலைகளுக்கென - அவர்கள் செய்த சூழ்ச்சிகள் குறித்தும், இத்தகைய கொடூரங்களுக்கு கருவியாகப் பயன்படுத்தப்பட்டவர்கள் உணர்ந்து கொண்டால், அதுவே பெரிய விடயமாக இருக்கும்.

துண்டுப்பிரசுரத்தில் தமிழ்மக்களின் போராட்டத்தின் நியாயப்பாடுகள் புரிந்து கொள்ளப்பட்டதாகத் தெரியாவிட்டாலும், தாம் எப்படி ஏமாற்றப்பட்டு யுத்தத்திற்குள் தள்ளப்பட்டோம் என்பதை உணர்ந்து கொண்டிருப்பதாகவே தெரிகிறது.

இந்தநிலை, சகல படையினருக்கும் ஏற்பட்டிருக்கிறது என்று எவராலும் அடித்துச் சொல்லமுடியாது. அந்த நிலை ஏற்படவுமில்லை. ஆனால் இவ்வாறானதொரு நிலை ஏற்பட்டால் மட்டுமே - அவர்கள் சிங்களத் தலைமைகளால் ஏமாற்றப்பட்டு யுத்தத்திற்குள் தள்ளப்பட்டதை முழுமையாக உணர்ந்துகொள்ள முடியும்.

இத்தகையதொரு நிலையின் மூலமே, சமாதானம் என்பது அர்த்தபூர்வமானதாக கட்டியெழுப்பப்படும். குறிப்பிட்டளவான படையினர் மத்தியில் தோற்றம் பெற்றிருக்கும் இந்த மனநிலை - சகல மட்டங்களிலும் தோற்றம் பெற்றால்தான், இந்த யுத்தத்தின் மீதான அர்த்தபூர்வமற்ற தன்மையை சிங்களப் படைகளால் புரிந்துகொள்ளமுடியும்.

இது தமிழர்களின் உரிமைப்போராட்டம் என்ற உணர்வு, அவர்களின் மனதில் தோற்றம் பெற்றால் தான் - நிரந்தர சமாதானத்துக்கான ஆக்கபூர்வ பங்களிப்பு படையினர் மத்தியில் இருந்து தோற்றம் பெறமுடியும்.

# நாடாளுமன்ற உறுப்பினர்களின் துப்பாக்கிகள்; அனுமதிப் பத்திரம் வழங்குவதற்கு நடவடிக்கை

### உள்துறை அமைச்சு ஏற்பாடு

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் கைத்துப்பாக்கிகளுக்கு அனுமதிப்பத்திரங்களை வழங்க, உள்துறை அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாவலர்கள் வைத்திருக்கும் ஆயுதங்களுக்கு அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்தபோதும், அவர்களின் தனிப்பட்ட பாவனையிலிருக்கும் கைத்துப்பாக்கிகளுக்கு - அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படவில்லை.

ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் ஆட்சிக் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட விசேட சலுகையின் அடிப்படையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், தமது கைத்துப்பாக்கிகளுக்கு அனுமதிப் பத்திரமின்றி, அரச அங்கீகாரத்துடன் வைத்திருக்க அனுமதிக்கப்பட்டிருந்து.

தற்போது ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள்- தமது கைத்துப்பாக்கிகளைப் பயன்படுத்திச் சில சட்டவிரோதச் செயல்களில் ஈடுபட்டுவருகின்றனர். அதனைக் கட்டுப்படுத்துவதற்காகவே - நாடாளுமன்ற உறுப்பினர்களின் கைத்துப்பாக்கிகளுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கத் தீர்மானித்திருப்பதாகவும், உள்துறை அமைச்சர் மேலும் தெரிவித்தார். (01)

## கடந்த ஆறுமாத காலப்பகுதியில் 716 சட்டவிரோத ஆயுதங்கள் மீட்பு

கடந்த ஆறுமாத காலப்பகுதியில் நாடளாவியரீதியில் சட்டவிரோதமான முறையில் பயன்படுத்தப்பட்டுவந்த சுமார் 716 ஆயுதங்களைப் படையினர் கைப்பற்றியுள்ளனர்.

2002 ஆம் ஆண்டு மட்டும் சட்டவிரோதமான முறையில் பயன்படுத்தப்பட்டு வந்த, 746 ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. 2003 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் ஜூன் மாதம் வரையான ஆறுமாத காலப்பகுதியில் சட்டவிரோதமாகப் பயன்படுத்தப்பட்டு வந்த 716 ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

2003 ஆம் ஆண்டு மட்டும் 72 ஷொட்கண், ரி-56 ரகத் துப்பாக்கிகள் 27, எஸ் - 84 ரக துப்பாக்கி 01, உள்ளூரில் தயாரிக்கப்பட்ட கைத்துப்பாக்கி 143, றிவோல்வர்கள் 11, துப்பாக்கி ரவைகள் 3 ஆயிரத்து 559 என்பவையே கைப்பற்றப்பட்ட ஆயுதங்களாகும்.

இதில் 50 வீதமான ஆயுதங்கள் இராணுவத்திலிருந்து தப்பிச் சென்றவர்களால், கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபடுபவர்களுக்கு விற்கப்பட்ட ஆயுதங்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (01)

## தடுத்து வைக்கப்பட்டிருந்த படைச்சிப்பாய் பொலிஸ் நிலைய கூரை பிரித்து ஓடினார்

(கொழும்பு)

இராணுவத்திலிருந்து தப்பியோடி, பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுத் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த சிப்பாய் ஒருவர் - பொலிஸாரின் காவலிலிருந்து தப்பியோடினார்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, கொள்ளைகளில் சம்பந்தப்பட்டதாக இராணுவத்திலிருந்து தப்பியோடிய சிப்பாய் ஒருவரைப் பொலிஸார் கைதுசெய்து, வென்னப்புவ பொலிஸ் நிலையத்தில் காவலில் வைத்திருந்தனர். அந்தப் பொலிஸ் நிலையத்திலிருந்து வேறொரு நபருடன் மேற்படி சிப்பாய், கூரையைப் பிரித்துத் தப்பியோட முயற்சித்தார்.

இதனைக் கடமையிலிருந்த பொலிஸார் ஒருவர் அவதானித்து, ஏனைய பொலிஸாரை உஷார்படுத்தினார்.

பொலிஸார் - சிப்பாயும் மற்றைய நபரும் தப்பியோடிய வேளை மடக்கிப் பிடிக்க முற்பட்ட சமயம், சிப்பாய் தப்பிச் சென்றுவிட்டார். மற்றவர் பொலிஸாரால் மீண்டும் பிடிக்கப்பட்டார்.

தப்பியோடிய சிப்பாயைக் கைதுசெய்யும் முயற்சியில் பொலிஸார் தொடர்ந்தும் ஈடுபட்டுவருகின்றனர்.

# காணாமற்போன இராணுவச் சிப்பாய் இருமாதங்களின் பின்பு சரணடைந்தார்

### மட்டக்களப்பு - செங்கலடியில் சம்பவம்

இரண்டு மாதங்களுக்கு முன்னர் காணாமற்போனதாக அறிவிக்கப்பட்ட இராணுவச் சிப்பாய் ஒருவர், மட்டக்களப்பு செங்கலடியிலுள்ள இராணுவச் சோதனைச் சாவடியில் கடந்த சனிக்கிழமை சரணடைந்துள்ளார்.

பலாங்கொடையைச் சேர்ந்த என்.யு.நசிர்கான் என்ற இராணுவச் சிப்பாயே சரணடைந்தவராவார். யாழ்ப்பாணத்தில் கடமை புரிந்து வந்த இவர் விடுமுறையில் வீட்டிற்கு வந்திருந்த போது, கடந்த 10 ஆம் திகதி சியம்பலாந்துவ என்ற இடத்திற்கு நண்பர் ஒருவரைச் சந்திக்கச் சென்றபோது- மகாஓயாவுக்கும், 69 ஆவது மைல் கல்லுக்குமிடையில் வைத்து இளைஞர் குழுவொன்றினால் கடத்தப்பட்டு, தென்னைமரத் தோப்பில் தங்க வைக்கப்பட்டதாகவும், அங்கிருந்துதான் தப்பி வந்ததாகவும் பொலிஸாருக்குத் தெரிவித்ததார்.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்திய பின்பு, 233 ஆவது படைப்பிரிவில இவர் தங்கவைக்கப்பட்டுள்ளார்.

# சுதந்திரக் கட்சி தேசிய மாநாடு செப்ரெம்பரில் நடத்த ஏற்பாடு

### முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்படும்

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் 52 ஆவது தேசிய மாநாடு- குருநாகல் வெலகெதர விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 2 ஆம் திகதி ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தலைமையில் இம் மாநாடு இடம்பெறவுள்ளது.

இம்மாநாட்டில், நிட்டம்புவவில் நடைபெற்ற சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதிநிதிகள் சம்மேளனக் கூட்டத்தில் வெளியிடப்பட்ட கட்சியின் புதிய கொள்கைத் திட்டம் தொடர்பாக - மக்களது ஆலோசனைகளையும், தீர்மானங்களையும் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்து வருவதாகவும், கொள்கைத் திட்டத்துக்கு அங்கீகாரம் பெறும் பொருட்டு அதனை எதிர்வரும் மாநாட்டில் சமர்ப்பிக்கவுள்ளதாகவும் சுதந்திரக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

## கலைத்துவத் திரைப்படத் தொடரில் பல்கலையில் வங்கமொழித் திரைப்படம்

### கலந்துரையாடலுக்கும் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகின் ஏற்பாட்டில், பிரதி ஞாயிறு தோறும் இடம்பெற்றுவரும் கலைத்துவ திரைப்படக் காட்சித் தொடரில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மு.ப.10 மணிக்கு புவியியற்துறை செல்வநாயகம் மண்டபத்தில் உலகப் புகழ்பெற்ற நெறியாளர் ' புத்தாடெப் தாஸ்குப்தா'வின் நெறியாள்கையில் உருவான " உத்தர்" (மல்யுத்தவீரர்) என்னும் வங்கமொழித் திரைப்படம் வீடியோக் காட்சியாகக் காண்பிக்கப்படவுள்ளது.

படநிகழ்வின் ஆரம்பத்தில் சுசந்த்ர பானர்ஜி இன் 'கதக்' நாட்டிய நிகழ்வு பற்றிய படமும் காண்பிக்கப்படும்.

படக்காட்சியின் இறுதியில் எழுத்தாளர் அ.யேசுராஜாவின் தலைமையில் காண்பித்த மேற்படி படங்கள் பற்றிய கலந்துரையாடல் இடம்பெறும்.

இந்த நிகழ்வுக்கு ஆர்வமுள்ளோர் வருகைதந்து பயன்பெற முடியுமென புறநிலைப்படிப்புக்கள் அலகின் இணைப்பாளர் பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

(க)

## மட்டக்களப்பு - வாகரையில் கரையொதுங்கிய திமிங்கலம்!

(வாழைச்சேனை)

மட்டக்களப்பு - வாகரைப் பிரதேசத்திலுள்ள சல்லித்தீவு என்னுமிடத்தில் கடற்கரையில் பாரிய திமிங்கிலம் ஒன்று கரை ஒதுங்கியுள்ளது.

இந்தப் பாரிய திமிங்கிலத்தை அப்பகுதி மக்கள் சென்று பார்த்து ஆச்சரியமடைந்ததுடன் - அது பற்றி, வாகரைப் பிரதேச செயலாளருக்கும் அறிவித்துள்ளனர்.

சில தினங்கள் உயிருடன் காணப்பட்ட இந்தத் திமிங்கிலம், பின்னர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலவாணிகளுக்கான நாணய மாற்று விகித விவரங்கள் வருமாறு:-

| | கொள்வனவு விலை (ரூ.ச.) | விற்பனை விலை (ரூ.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 96.90 | 92.30 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 155.50 | 157.24 |
| 1 யூரோ | 109.38 | 111.02 |
| 1 சுவிஸ் பிராங் | 71.40 | 72.64 |
| 1 அவுஸ்திரேலிய டொலர் | 62.74 | 63.75 |
| 1 ஜப்பானிய யென் | 0.80 | 0.81 |
| 1 சவூதி றியால் | 25.00 | 90.00 |

# தமிழர்களுக்கு செய்த கொடுமைகளுக்கு பாவமன்னிப்புக் கோரும் சிங்களவர்கள்!



இரு தசாப்தங்களுக்கும் மேற்பட்ட காலமாக இலங்கையில் நடைபெற்ற போருக்கான காரணங்களை - இப்போது இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளும், பெரும்பான்மை மக்களும் மெதுவாகப் புரிந்துகொள்ளத் தொடங்கியிருக்கிறார்கள். முன் எப்போதும் இருந்திராத அளவுக்கு, தமிழர்களுக்குத் தாம் இழைத்த அநீதிகள் தொடர்பாக, சிங்களப் பெரும்பான்மைச் சமூகம் ஆதங்கப்படவும், வெட்கித் தலைகுனியவும் தொடங்கியிருக்கிறது.

இந்தப் போர் சரியாக, தனது இருபது வருட காலப்பகுதியைப் பூர்த்திசெய்யும் வேளையில், இன்று இந்தச் சுடலைஞானம் பலருக்கும் தோன்றியிருக்கிறது. இலங்கையின் இனமுரண்பாடுகளுக்குக் காரணமாக அமைநத நிகழ்வுகள் பல உண்டு. ஆனால், அவற்றில் மிகவும் முககியமானவையாகவும், வரலாற்றில் பாரிய திருப்பத்தை ஏற்படுத்தியது இரண்டு சம்பவங்கள். அந்த இரண்டு சம்பவங்கள் தொடரபாகவுமே, இன்று சிங்கள அரசியலாளர்கள் வெளிப்படையாகப் பேசத் தொடங்கியிருப்பது, ஒரு நல்ல அரசியல் அடையாளமாகக் கொள்ளத்தக்கவையே.

காலங்காலமாக சகோதரர்களாக அருகருகே வாழ்ந்துவந்த சிங்கள-தமிழ் இனங்களிடையே, முதன்முதலில் ஆழமான பிளவை ஏற்படுத்தியது தனிச்சிங்களச் சட்டமே. எந்த விதமான நியாயங்களுமின்றி, வெறும் அரசியல் ஆதாயத்துக்காக மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கையே, தமிழ்ச் சமூகத்துக்குள் தாம் இரண்டாந்தரப் பிரஜையாக நடாத்தப் படுகிறோம் என்கின்ற உணரவை ஆழமாகப் பதித்துவிட்டிருந்தது.

ஒரு பண்டாரநாயக்கவுக்கும், ஒரு ஜே.ஆர். ஜெயவர்த்தனவுக்கும் இடையே நிலவிய அரசியல் போட்டாபோட்டியின் அறுவடைதான் இந்தத் தனிச்சிங்களச் சட்டமேயன்றிவேறொன்றும் கிடையாது. இலங்கையில் பெரும்பான்மையினராக இருக்கும் சிங்கள மக்களது வாக்குகளை அள்ளுவற்கு, இந்த இரு அரசியல்வாதிகளும் கைக்கொண்ட அரசியல் குறுக்குவழியே இந்தத் தனிச்சிங்களச் சட்டம்.

வெறுமனே உணர்ச்சி ரீதியாக மொழி வெறியைத் தூண்டி, அதனை வாக்குகளாக அறுவடை செய்துகொண்டார்கள் இந்த அரசியல்வாதிகள். அப்போதைக்கு இந்த அரசியல் சித்துவிளையாட்டு இவர்களுக்கு வெற்றியைக் கொடுத்திருக்கலாம். உடனடி அறுவடை இவர்களுக்கு இலாபமாகத்தான் இருந்தது. ஆனால், இதன் துயரமான விளைவுகளை இன்றுவரை இந்த முழுநாடுமே அனுபவித்துக் 'கொண்டிருக்கிறது.

இவர்களது, அரசியல் பாரம்பரியத்தில் வளர்த்தெடுக்கப்பட்ட சிங்கள அரசியல்வாதிகள் அனைவருமே இந்தத் துயர் மிகுந்த பணியின் மோசமான விளைச்சல்களையே அறுவடை செய்துகொண்டிருக்கிறார்கள். ஒரு இனத்தின் அடையாளமாக இருந்த மொழியை, இரண்டாம் பட்சநிலைக்குத் தள்ளும்போது - அது அந்த இனத்தின் ஆன்மாவில் எத்தகைய விளைவுகளை ஏற்படுத்தக்கூடும் என்று, அன்று இந்த அரசியல்வாதிகளால் நினைத்துப்பார்க்க முடியவில்லை.

தனிச்சிங்களச். சட்டத்தின் எதிரொலியாக எதிர்ப்புப் போராட்டம் மேற்கிளம்பியபோது, தமிழர்களது உடல்களில் - சிங்கள ஸ்ரீ ஐப் பதித்து, தமது வெறியாட்டத்தைச் சிங்களவர்கள் புரிந்தார்கள். இதன் விளைவு, அந்தத் தீக்காயங்கள் முழுத்தேசத்தையும் எரித்து நாசமாக்கியது. இது சிங்களப் பெரும்பான்மை அரசியல்வாதிகள் - தமிழர்களது மனங்களில் ஏற்படுத்திய முதலாவது வடு.

இந்த வடுவுடன் இனி இந்த நாட்டில் தமிழர்கள் தனியுரிமையுடன் வாழமுடியாது என்பதை உணர்ந்து, தமது உரிமைகளைச் சாத்வீகரீதியாகக் கோரிப் போராடி வந்தவர்களை, ஆயுதங்களை ஏந்துமாறு செய்தது மற்றுமொரு சம்பவம். அது 1983 ஆம் ஆண்டு ஜூலை மாதம் நடந்தேறியது. மொழியால் இரண்டாந்தரப் பிரஜையாக்கப்பட்ட தமிழர்கள், அந்த நிலையிலும்கூட, நிமிர்ந்துவாழ முடியாது என்பதைப் பிரகடனம் செய்வதாகக் கொழும்பிலும், இலங்கையின் தென்பகுதிகளிலும் வாழ்ந்த தமிழர்கள்மீது காடைத்தனத்தை அவிழ்த்துவிட்டனர்.

கொல்லப்பட்டவர்களும், உயிருடன் தீமூட்டி எரிக்கப்பட்டவர்களும், கண்டதுண்டமாக வெட்டி வீசப்பட்டவர்களும், பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டவர்களுமாகத் தமது சொத்துகள் அனைத்தையும் இழந்து, நடைப்பிணங்களாக, இருப்பிடங்களைவிட்டுத் தமிழர்கள் விரட்டியடிக்கப்பட்டார்கள். ஈழத்தமிழர்களின் பாரம்பரியத் தாயகம் வடக்கும் - கிழக்கும்தான் என்ற உண்மையை அவர்களுக்கு இடித்துரைப்பதாக, வடக்கு-கிழக்குக்கு வெளியே வாழ்ந்தவர்கள் அனைவரும் வடக்கு - கிழக்குப் பகுதிக்கு விரட்டப்பட்டார்கள்.

தனிச்சிங்களச் சட்டப் பிரகடனம் மூலம், மொழிரீதியாக இரண்டாம்பட்ச நிலைக்குத் தள்ளப்பட்ட தமிழர்கள்- இந்த ஒட்டுமொத்தக் காடைத்தனத்தின்மூலம், உரிமையோடு இனித் தமிழினம் தலைநிமிர்ந்து வாழவேண்டுமானால், ஆயுதமேந்திப் போராடித்தானாக வேணடும் என்கின்ற நிலைக்குத் தள்ளப்பட்டது. இந்த இரண்டு சம்பவங்களின் விளைவுகளையுமே இன்று முழு இலங்கையும் அனுபவித்துக்கொண்டிருக்கிறது.

தமிழர்கள்மீது - சிங்களப் பேரினவாதிகள் புரிந்த, கொடூரத்தின் அறுவடையாக, தமிழர் தாயகத்தில் நிறுவிய படைத்தளங்கள் தாக்கியழிக்கப்பட்டபோதும், இறுதியாகக் கட்டுநாயக்க விமானத்தளங்களின்மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் பின், சிங்கள மக்கள் விழித்துக் கொண்டனர்.

இந்த நேரத்தில்தான், ஆற அமர இருந்து சிங்கள மக்கள் இந்த அனர்த்தங்கள் யாவற்றினதும் காரணங்களை ஆராய்ந்துகொண்டிக்கிறார்கள். முப்புரமும் எரிந்து, முழுத்தேசமும் நாசத்துள் ஆழக் காரணமாக இருந்தது, நாம் முன்னம் இட்ட அந்தத் தீயே என்பதைச் சில புத்தியுள்ள சிங்களவர்கள் புரிந்துகொண்டிருக்கிறார்கள். தமது முன்னோர்களால் இழைக்கப்பட்ட இந்த அநியாயங்களுக்காக, தமிழர்களிடம் சிரம்தாழ்த்தி மன்னிப்புக் கோரவேண்டும் என்று இவர்கள் இன்று வெளிப்படையாகவே சொல்லியிருக்கிறார்கள்.

தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட இந்த அநீதிகளின் இருபதாவது வருடம் பூர்த்தியாகின்றநிலையில், இவர்கள், இந்த மன்னிப்புக் கோரலுக்குத் தயாராகியிருக்கிறார்கள். போரினால் எப்போதும் மோசமாகப் பாதிக்கப்படுபவர்களான பெண்கள்தான், இந்த அறிவிப்பை முதலில் விடுத்தார்கள். கொழும்பில் இயங்கிவரும் பல பெண்கள் அரசசார்பற்ற நிறுவனங்கள் இணைந்து. 1983 ஆம் ஆண்டு ஜூலை மாதம், தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்காக அரசு - வெளிப்படையாகவே தமிழ் மக்களிடம் மன்னிப்புக்கோரவேண்டும் என்று தெரிவித்துள்ளது.

1983 ஆம் ஆண்டில் நடைபெற்ற படுகொலைகள் குறித்து விசாரணை நடாத்திய விசாரணைக் குழுவும் இதேகருத்தையே வெளியிட்டிருக்கிறது. இந்தநிலையில், கடைசியாக 100 அரசசார்பற்ற நிறுவனங்கள் இணைந்து, இன்று இந்தக் கருத்தை இன்னும் வலுவாக, உரத்த குரலில் தெரிவித்திருக்கின்றன.

தமது இந்த அறிவிப்பை மும்மொழிகளிலும் அச்சிட்டு, துண்டுப் பிரசுரங்களாக வெளியிடவும் இவர்கள் உத்தேசித்திருக்கிறார்கள். 1983 முதல் இடம்பெற்ற சகலவிதமான வன்செயல்களுக்கும் ஜனாதிபதி, பிரதமர் உட்பட அனைத்து அரசியல்வாதிகளும் பொறுப்பெடுத்து-தமிழர்களிடம் பகிரங்கமாக மன்னிப்புக்கோரி, பாதிக்கப்பட்டவர்களுக்குரிய நிவாரணம் வழங்கப்படவேண்டும் என்று இவர்கள் தமது துண்டுப பிரசுரத்தில் வலியுறுத்தியிருக்கிறார்கள்.

இனி ஒருபோதும் போர்வேண்டாமென, அனைவரும் சபதம் எடுத்துக்கொண்டு, நாட்டில் இனிமேல் இத்தகைய அநியாயம் தமிழர்களுக்கு இழைக்கப்படாது என்கின்ற வாக்குறுதியை வழங்கவேண்டும் என்றும் கேட்டுள்ளனர்.

இது ஒருபுறமிருக்க, கடந்த பதினாறு வருடங்களுக்கு முன்னர் நடைமுறைப்படுத்தப்பட்ட தமிழும் - அரச கருமமொழியே என்கின்ற சட்டமும் இன்னமும் வலுவுடன் இயங்கத்தொடங்கவில்லை என்று, அரசகருமமொழி ஆணைக்குழுத் தலைவர் குணசேகர ஒப்புதல் வாக்குமூலம் அளித்துள்ளார்.

இன்னும் தமிழ் இரண்டாம்பட்ச மொழியாகத்தான் இலங்கையில் இருக்கிறது என்பதையும், இதுதான் பிரச்சினை தோன்றவும், அது இந்தளவு வளரவும் காரணமாக இருந்தது என்பதையும் ஒப்புக்கொண்டுள்ள இவரும், இந்த ஆணைக்குழுவின் ஏனைய பிரதிநிதிகளும் இந்தக் குறைகளை நிவர்த்திப்பது பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். ஆக, தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் பற்றி, இன்று சிங்களதேசம் மெல்ல உணரத் தலைப்பட்டிருக்கிறது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண எடுக்கப்பட்டுவரும் முயற்சிகளிடையே, இந்த மனமாற்றங்கள் எத்தகைய பலனைத் தரும். இதை இன்னும் எஞ்சியிருக்கும் இனவாதிகள் சீர்குலைக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டியது சமாதான முயற்சிகளை முன்னெடுக்கும் அரசாங்கத்தினது பொறுப்பாகும். ▢▢

நன்றி : நம்நாடு

## நிவாரணங்கள் எதுவும் கிடைக்காமல் நலன்புரி நிலையங்களில் மக்கள்!

யாழ். குடாநாட்டில் உயர்பாதுகாப்பு வலயங்கள் காரணமாக - தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர முடியாது, அகதிமுகாம்களில் வாழும 212 குடும்பங்கள், எந்தவித நிவாரண உதவியுமின்றி வாழ்வதாகக் கவலை தெரிவித்துள்ளனர்.

கடந்த காலங்களில் ஏற்பட்ட யுத்த அனர்த்தங்களால், இடம்பெயர்ந்து அல்லல்பட்டுப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின் சமாதான நிலையினால், யாழ்ப்பாணம், திரும்பியிருந்தபோதும், உயர் பாதுகாப்பு வலயங்களால் மீளக் குடியமர முடியாது, அடிப்படை வசதிகளற்ற நலன்புரி நிலையங்களில் வாழும் மக்களே இவ்வாறு கவலை தெரிவித்துள்ளனர்.

தும்பளை நீதிவான் முகாமில் 30 குடும்பங்களும், பருத்தித்துறை லூர்துமாதா முகாமில் 13 குடும்பங்களும், தெல்லிப்பளை கோணாபுரம் அகதிமுகாமில் 50 குடும்பங்களும், ஊறணி நீதிவான் நலன்புரி நிலையத்தில் 20 குடும்பங்களும், கோப்பாய் கிருஷ்ணன் நலன்புரி நிலையத்தில் 12 குடும்பங்களும், உடுவில் சபாபதிபிள்ளை அகதிமுகாமில் 49 குடும்பங்களும், சண்டிலிப்பாய் அட்டகிரி மற்றும் புலவர் முகாம் ஆகியவற்றில் 38 குடும்பங்களும் எந்தவிதமான கொடுப்பனவுகளோ, உதவிகளோ இன்றி வாழ்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(17)

## "மனமுருகி வயல் வெளியில்" கவிதைத் தொகுதி வெளியீடு

வல்வெட்டித்துறையிலிருந்து புலம்பெயர்ந்து சுவிஸ் நாட்டில் வாழ்கின்ற கவிஞர் கஜனின் "மனமுருகி வயல் வெளியில்" என்ற கவிதைத் தொகுதி வெளியீட்டு நிகழ்வு, மாலை வல்வெட்டித்துறை சிதம்பரக் கல்லூரியின் அதிபர் ந.அரியரத்தினம் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் தமிழீழ தேசியக் கொடியை விடுதலைப் புலிகளின் வடமராட்சி வடக்கு' கடற்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் கல்யாணி ஏற்றிவைத்தார்.

நூலிற்கான ஆய்வுரையினை எழுத்தாளர் செம்பியன் செல்வன், யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் க.சிவலிங்கராஜா ஆகியோர் நிகழ்த்தினர். நூலை வல்வெட்டித்துறை அம்மன் ஆலய பிரதமகுரு சோ. தண்டாயுதபாணி தேசிகர் வெளியிட்டுவைத்தார்.

நிகழ்வில் குடத்தனை பங்குத்தந்தை ராஜன் றோகனும், வல்வை வைத்தீஸ்வர ஆலய பிரதமகுருவான மனோகரக் குருக்களும் ஆசியுரையை நிகழ்த்தினர். நிகழ்வில் தமிழீழ கலைபண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை சிறப்பு சொற்பொழிவாற்றினார். (17)

## மிருகங்கள் மூலம் பரவும் நோய்

பகுதி 9



குடற்சுவரில் குடுவை போன்ற குழியை அமீபா ஏற்படுத்தியிருப்பதைப் படத்தில் காணலாம். அம்புக் குறிகள் அமீபா சென்ற வழியையும் தொடர்ந்து செல்லக்கூடிய வழிகளையும் காட்டுகின்றன.

### அமீபியாசிஸ் (AMOEBIASIS)

என்ரமீயா ஹிஸ்ரலிக்கா என்ற நுண்ணுயிரி இந்த நோயை ஏற்படுத்தும். இது ஓர் கலப்புற ஒட்டுண்ணியாகும். இவை தொற்று ஏற்பட்டவர்களின் குருட்டுக் குடலிலிருந்து, குதம் வரை அதிகளவில் காணப்படும். பெருங்குடலில்- சீதப்படை, உப சீதமுளிப்படையில் வாழ்ந்து, ஆரம்பத்தில் அமீபா வயிற்றுளைவு (Amoebic Dysentery) நோயை ஏற்படுத்தும். எண்ணை சேர்ந்த உணவுப் பொருட்களை உண்ணும் போது, பல தடவைகள் மலங்கழியும். நாட்டு வைத்திய முறையில் வெந்தயத்தை விழுங்குதல், வில்வம்பழம் உண்ணுதல் போன்றவை இதற்கான சிகிச்சைகளாகக் கடைபபிடிக்கப்படுகின்றன.

ஆங்கில வைத்திய முறையில் Flagyl என்ற பெயருடைய மருந்து பயன்படுத்தப்படுகிறது. இநத மருந்து நாக்கில் புளிப்புணர்ச்சி, கறள் மணம், உணவில் விருபபமின்மை, குமட்டல் போன்றவற்றைப் பக்க விளைவாகக் கொண்டிருப்பதாலும், அமீபாவினால் ஏற்படும் ஆபத்தை அறியாததாலும் - அநேகமானோர் வைத்தியர் சிபார்சு செய்யும் இந்த மருந்தை நீண்டகாலத்திற்குக் குடிப்பதில்லை. நான்கு, ஐந்து நாட்களுடன் மருந்து குடிப்பதை நிறுத்தி விடுகிறார்கள். இதனால், இந்த நோய் பூரணமாகக் குணமடைவதில்லை. இவர்களது குடலில் அமீபா தொடர்ந்து வாழும், பெருக்கமடையும்.

நன்கு வளர்ச்சியடைந்த அமீபா ஒவ்வொன்றும் - இலிங்கமில் முறை இனப்பெருக்கத்தின் மூலம், இருகூற்றுப் பிளவுமுறைக்கு உட்பட்டு, இரு புன்னமிபாக்களைத் தோற்றுவிக்கும். இவையும் தாய் அமீபாவைப்போன்று செங்குலியங்களையும், இழையங்களையும் உட்கொண்டு வளரும். சிறிது காலத்தின் பின், கெரற்றீனிலான ஒளியூடுபுகவிடக்கூடிய பொருளைச் சுரந்து, தன்னைச் சுற்றித் தடையுள்ள, நிறமற்ற, மெல்லிய சிறைப்பையை (cyst) அமைத்து, அதனுள் கோளவுரு நிலையில் இருக்கும். இச்சிறைப்பைகளே - நோயாளியின் மலத்துடன் வெளியேற்றப்பட்டு, பிறருக்குத் தொற்றுகின்றன. தொற்றும் நிலையான சிறைப்பை நிலையிலுள்ள அமீபா - சுகாதாரமற்ற பழக்கவழக்கங்களின்மூலம் வேறொருவருக்குத் தொற்றும்.

(தொடரும்.....)

ச.ஆ.கோபாலமூர்த்தி

# ஈராக்கிலுள்ள அமெரிக்கப் படையினர் ‘நிமோனியா’ வைரஸ் நோயால் பாதிப்பு!

## இருவர் பலி! நூற்றுக்கு மேற்பட்டோருக்கு சிகிச்சை!!



ஈராக்கில் பணியாற்றும் நூறுக்கு மேற்பட்ட அமெரிக்க படையினர், நிமோனியா எனப்படும் “ வைரஸ்” நோயினால் பாதிக்கப்பட்டுள்ளமை, அமெரிக்க இராணுவ வைத்திய நிபுணர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

இதுவரை, இந்த வைரஸ் நோயினால், இரண்டு அமெரிக்கப் படையினர் கொல்லப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

ஈராக் படையினர், “சார்ஸ்” கிருமிகளை ஆயுதங்களாகப் பாவித்தமை, இந்த நோய்த் தாக்கத்துக்குக் காரணமாக இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

ஆனால் - சீனா, ஹொங்கொங் ஆகிய நாடுகளில், உயிர் சேதத்தை உண்டாக்கிய சார்ஸ் நோய்க்கான அறிகுறிகள், இந்த வைரஸ் நோயில் தென்படவில்லை எனக் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நோய்க்கான காரணங்களை ஆராய்வதற்கு, அமெரிக்க வைத்தியக் குழுவொன்று ஈராக்கிற்குச் செல்லவுள்ளது. இந்த வைத்தியக்குழு, ஈராக் செல்வதற்கு முன்னர் - இந்நோயால் பாதிக்கப்பட்டவர்கள் சிகிச்சை பெற்றுவரும் ஜேர்மனியிலுள்ள இராணுவ வைத்தியசாலைக்கும் செல்லவுள்ளது. இதன்மூலம் இந்நோய்க் காரணிகளைக் கண்டறிய அவர்கள் முயற்சி செய்வர் எனத் தெரியவருகிறது.



ரோமின் தெற்கு நகர் ஒன்றில் அமைந்துள்ள கோடைக்கால இருப்பிடத்தில், குழந்தை ஒன்றை இரண்டாவது பாப்பரசர் அருளப்பர் சின்னப்பர் கொஞ்சி மகிழ்வதைப் படத்தில் காணலாம்.

# லைபீரியாவில் மோதல் தணிகிறது: போரிட்டவர்கள் கைகுலுக்கினர்!



லைபீரியாவில், கடந்த நான்கு வாரங்களாகத் தொடர்ந்த மோதல் முடிவுக்கு வந்துள்ளது,

இதையடுத்து, அரசிற்கெதிரான தீவிரவாதிகளும், அரசபடையினரும் கை குலுக்கிக் கொண்டனர். இதனிடையே, நைஜீரியாவின் அமைதிப் படையினர், லைபீரியாவில் பணியாற்றச் சென்றுகொண்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

கடந்த நான்கு வாரங்களாகத் தொடர்ந்த துப்பாக்கிச் சண்டை ஓய்விற்கு வந்ததை மக்கள் வரவேற்றுள்ளனர்.

அமைதிப்படையினர் விமான நிலையத்தை வந்தடைந்தபோது - மக்கள் குதூகலத்துடன் அவர்களை வரவேற்றனர்.

தலைநகர் மொன்ரோவியாவில் வாழும் இரண்டு லட்சத்து 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்களுக்கு உணவு, குடிநீர், மருத்துவ வசதிகள் உடன் தேவைப்படுவது குறிப்பிடத்தக்கது.

லைபீரிய ஜனாதிபதி சாள்ஸ் ரெயிலர், விரைவில் நாட்டிலிருந்து வெளியேறி தென்னாபிரிக்காவிற்குச் செல்வாரென, அந்த நாட்டு ஜனாதிபதி தபோ மெபெசி கூறியுள்ளார். ஆனால், அவர் எந்த நாட்டில் தஞ்சம் கோருவார் என்பதை அவர் குறிப்பிடவில்லை.

உலகவலம்

# ஒரு தொகுதி பலஸ்தீன கைதிகளை இஸ்ரேலிய அரசாங்கம் விடுவித்தது!



இஸ்ரேலிய அரசால் தடுத்துவைக்கப்பட்டிருந்த ஒரு பகுதி பலஸ்தீனக் கைதிகள் விடுவிக்கப்பட்டனர். விடுவிக்கப்பட்ட கைதிகள் - காஸா, வெஸ்ற்பாங்க்” ஆகிய இடங்களை அடைந்தனர்..

இஸ்ரேல் - தனது நல்லெண்ண வெளிப்பாடாக, கடந்த புதனன்று தனது சிறையிலிருந்த 340 கைதிகளையும், பின்னர் 100 கைதிகளையும் விடுவித்தது. விடுவிக்கப்பட்ட கைதிகள் இஸ்ரேலுக்கு எதிரான தாக்குதல்களில் ஈடுபடாதவர்கள் என, இஸ்ரேலிய அதிகாரிகள் தெரிவித்தனர்.

இஸ்ரேலிய அரசால் தடுத்துவைக்கப்பட்டுள்ள, ஆறாயிரம் பலஸ்தீனக் கைதிகளும் விடுவிக்கப்படவேண்டும் என, பலஸ்தீனிய அரசு அறிவித்திருந்தது. ஆனால், விடுவிக்கப்பட்டவர்களின் தொகை குறைவானதென தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்காவின் உதவியுடன் உருவாக்கப்பட்ட, இஸ்ரேல் - பலஸ்தீனர்களுக்கிடையிலான சமாதானத்திற்கான திட்டவரைபு, கைதிகளின் விடுவிப்புத் தொடர்பான பிரச்சினையால், தொடர்ந்து செயற்பட முடியாதிருந்தது குறிப்பிடத்தக்கது.



ஈராக்கில், கடையொன்றில் ஏற்பட்ட தீயை அந்நாட்டு தீயணைப்புப் படையினர் அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதையும், அமெரிக்கப் படை வீரர் ஒருவர் காவல் புரிவதையும் படத்தில் காணலாம்.

### தென்கொரியாவில்

# ரயிலில் தீ மூட்டியவருக்கு ஆயுள் தண்டனை விதிப்பு!

தென்கொரியாவில் சுரங்க ரயிலில், தீ மூட்டி 198 பிரயாணிகளின் மரணத்திற்கும், இரண்டு மின்சார ரயில்கள் தீக்கிரையானதற்கும் காரணமாக இருந்தார் எனக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்த “கிம் டா கவான்’’ என்ற தென்கொரியருக்கு, நீதிமன்றம் ஆயுள்தண்டனை விதித்துள்ளது.

பெற்றோலை ரயிலில் ஊற்றித் தீ மூட்டியதாக, இவர் மீது குற்றஞ் சுமத்தப்பட்டிருந்தது.

இவருக்கு மரணதண்டனை வழங்குமாறு, அவருக்கு எதிராக



வாதாடிய சட்டத்தரணி கோரியிருந்தார்.

ஆனால், அவர் குற்றத்தை ஒப்புக்கொண்டதாலும் - சம்பவம் நடந்த நேரத்தில், மனநிலை பாதிக்கப்பட்டிருந்ததாலும், கிம்மிற்கு ஆயுள் தண்டனை வழங்கியுள்ளதாக, நீதிவான் தீர்ப்பளித்திருந்தார். அத்துடன் பிரயாணிகளுக்குப் போதிய பாதுகாப்பு வழங்கத் தவறியமைக்காக, ரயில்வே ஊழியர்களுக்கு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது.

# சட்டம், ஒழுங்கு பேணுதல் ஈராக்கில் முன்னேற்றம்

## அமெரிக்க அதிகாரி பேணாட் கெரிக்

ஈராக்கில் - சட்டம், ஒழுங்கைப் பேணுவதில் முன்னேற்றம் காணப்படுவதாக, ஈராக்கிய பொலிஸ் படையைச் சீர்செய்வதற்காக அமெரிக் காவால் தெரிவு செய்யப்பட்ட பேணாட் கெரிக் தெரிவித்தார்.

அமெரிக்கா - இங்கிலாந்து கூட்டுப்படைக்கெதிராக, ஈராக்கிய மக்கள் கடுமையான கருத்து வேறுபாடுகளை வெளியிடுவதற்கு, சதாமின் வீழ்ச்சிக்கு பின் நாட்டில் அதிகரித்துள்ள குற்றச்செயல்கள் காரணமாக அமைந்திருந்தது.

அண்மையில், நால்வர் கொண்ட குழுவினால் பணத்திற்காகக் கடத்தப்பட்ட ஈராக்கியர்களைப் பொலிஸார் மீட்டிருந்தனர்.

சதாமின் ஆட்சிக்காலத்திலும், பணத்திற்காக மக்களை பணயக் கைதிகளாக வைத்திருப்பது சாதாரண செயலாக இருந்தது.

இக்குற்றங்களைச் செய்பவர்கள், சதாமுடன் தொடர்புடையவர்கள் எனவும், பொலிஸ் அதிகாரி கெரிக் தெரிவித்தார். சட்டம் ஒழுங்கை பேணுவதற்கு 5000 இற்கு மேற்பட்ட பொலிஸார் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

# ஜகார்த்தா ஹொட்டேல் குண்டுவெடிப்பு; பாலித்தீவுத் தாக்குதலுடன் தொடர்பு!



பாலித்தீவில், கடந்த ஆண்டு ஏற்பட்ட குண்டுவெடிப்பிற்கும், செவ்வாய்க்கிழமை ஜகார்த்தாவில் உல்லாச விடுதியில் ஏற்பட்ட குண்டு வெடிப்புக்கும் இடையில் தொடர்புகள் உள்ளதாக, இந்தோனேஷிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விடுதியில் ஏற்பட்ட குண்டுவெடிப்பில் 14 பேர் கொல்லப்பட்டனர். 150 இற்கும் அதிகமானோர் காயமடைந்திருந்தனர்.

பாலித்தீவுக் குண்டுவெடிப்பில் பயன்படுத்தப்பட்ட வெடிபொருட்கள், ஜகார்த்தாவில் விடுதியின் மீதான தாக்குதலுக்கு பாவிக்கப்பட்ட வெடிபொருட்களை ஒத்திருந்ததாக புலனாய்வுத்துறையைச் சேர்ந்த எர்வின் மாபசெங் கூறியுள்ளார்.

பாலித்தீவுக் குண்டுவெடிப்புடன் தொடர்புடையவர் எனச் சந்தேகிக்கப்படும் அமிரேசி பின் நூர்சீம் மீதான வழக்கின் இறுதித்தீர்ப்புக்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் இத்தாக்குதல், நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.



அமெரிக்க விமானத் தாங்கிக் கப்பலான ‘யு.எஸ்.எஸ். கான் விஸன்’ இன் மேல்தளத்தில் அமெரிக்கத் தாக்குதல் விமானமான எப்.ஏ. -18 கொன்னற் பறப்புக்குத் தயாரான நிலையில் காணப்படுகிறது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# இந்திய மீனவர்களின் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது

மாதகல் கடற்பரப்பில் -அத்துமீறி நுழைந்து மீன்பிடித்த நான்கு இந்திய மீனவர்கள் மீதான வழக்கு விசாரணை, நேற்றையதினம் யாழ். உயர் நீதிமன்றத்தில் இடம்பெற்றது.

இவ்வழக்கின் சாட்சிகளான, ஊர்காவற்துறைப் பொலிஸார் நால்வரும், மேற்படி மீனவர்களை கைது செய்த கடற்படையினரும் நேற்றைய விசாரணையில் சமூகமளித்திருந்தனர்.

வழக்கினை விசாரித்த நீதிபதி வரதராஜா - செப்ரெம்பர் 15 ஆம் திகதி முதல் 19 ஆம் திகதிவரையிலான ஐந்து நாட்களுக்கும், இவ்விசாரணை தொடர்ந்து நடைபெறுமென, வழக்கினை ஒத்திவைத்தார்.

தமிழ்நாட்டைச் சேர்ந்த இராசபானு (வயது 28), மாணிக்கசாமி சுந்தர் (வயது 20), அஞ்சம்பன் சந்திரன் (வயது 26), காத்தவராஜா சிவானந்தம் (வயது 23) ஆகிய நான்கு மீனவர்களுமே கைதுசெய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# கிளிநொச்சி வலய தமிழ்த்தின விழா பாரம்பரிய நிகழ்வுகளுடன் ஆரம்பம்!

கிளிநொச்சி வலய கல்விக்கழகம் நடாத்தும் - தமிழ்த்தினப் போட்டிகள் நேற்று கிளிநொச்சியில் ஆரம்பமானது.

நேற்றுமாலை 4.00 மணியளவில், கிளிநொச்சி முருகன் ஆலயத்தில் விசேட பூசைகளுடன் இவ்விழா ஆரம்பமாகின.

தொடர்ந்து ஆலயத்திலிருந்து, தமிழரின் பாரம்பரியத்தை வெளிப்படுத்தும் கரகம், காவடி, கோலாட்டம், கும்மி, போன்ற பண்பாட்டு ஊர்வலமாக, கண்டிவீதியூடாக கிளிநொச்சி மத்திய கல்லூரியை வந்தடைந்தது.

தமிழ்தினப் போட்டியின் - ஆரம்ப நிகழ்வுகளை யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எஸ்.சிவலிங்கராஜா மங்களவிளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார்.

தேசியக்கொடியை கல்விக்கழகப் பொறுப்பாளர் இளங்குமரன் ஏற்றினார். இந்நிகழ்வில், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தி.இராசநாயகம் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டு நிகழ்வினை ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வில் வாழ்த்துரையை- கல்விக்கழகப் பொறுப்பாளர் இளங்குமரனும், சிறப்புரையினை கலாநிதி சிவலிங்கராஜாவும் நிகழ்த்தினார்.(108)



கிளிநொச்சி வலய தமிழ் விழாவில் யாழ் பல்கலைகழகத் தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சிவலிங்கராஜா மங்கள விளக்கேற்றுகிறார்.

## கிருமிநாசினி தெளித்தவர் மரணமானார்!

பயிர்நிலங்களுக்கு - கிருமிநாசினி தெளித்தவர் நச்சுத்தன்மையால் பாதிக்கப்பட்டு பரிதாபகரமாக மரணமடைந்தார். இன்னொருவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேற்படி சம்பவம், வட்டக்கச்சிப் பகுதியில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது. விமலச்சந்திரன் (வயது 32) என்பவரே உயிரிழந்தவராவார். (122)

# உயர் தொழில்நுட்ப முறையின் மூலம் சிறைகளைப் பாதுகாக்க நடவடிக்கை

(கொழும்பு)

கையடக்கத் தொலைபேசிகள், மின்னியல் உபகரணங்களை சிறைசாலைக்குள் கடத்திச்செல்வதைத் தடுப்பதற்கு, அவை தொடர்பான மின்னியல் கருவிகளைப் பொருத்துவதற்கான முயற்சிகளை, சிறைச்சாலை ஆணையாளர் ரூமி மர்சூக் மேற்கொண்டுள்ளார்.

அண்மையில் போதைப் பொருட்களும், கையடக்கத் தொலைபேசிகளும், சிறைச்சாலைகளுக்குள் கடத்திச்செல்லப்பட்ட பின், பாதுகாப்பைப் பலப்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதாகவும், சிறைக்காவலில் உள்ள பாதாள உலகைச் சேர்ந்த கைதிகளின் பாவனைக்காகவே, இவை கடத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை- திடீரெனச் சிறைச்சாலையைச் சோதனையிட்டபோது - கைதிகளிடமிருந்து இரண்டு கையடக்கத் தொலைபேசிகளும், அவற்றுக்கான மின்னேற்றிகளும் கைப்பற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# இரண்டு வயது சிறுவன் விஷம் தீண்டி மரணம்!

கிளிநொச்சி உதயநகரில்- விஷம் தீண்டியதில் சிறுவன் ஒருவன் பரிதாபகரமாக உயிரிழந்தான்.

இரண்டு வயதுடைய நடராசா யதிர்சன் என்ற சிறுவனே நேற்று அதிகாலை விஷம் தீண்டி உயிரிழந்தவராவார்.

இந்தச் சிறுவனின் இரண்டாவது பிறந்தநாள் வைபவம் நேற்று முன்தினம் மாலை வீட்டில் கொண்டாடிய பின்னர், பிறந்தநாள் விழாவுக்காக அமைக்கப்பட் டிருந்த பந்தலில் உறங்கிக்கொண்டிருந்தபோது - நேற்று அதிகாலை ஒரு மணியளவில் இந்தச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

உடனடியாக சிறுவனை கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனைக்குக் கொண்டுசென்றபோதிலும், சிகிச்சை பலனளிக்காது சிறுவன் பரிதாபகரமாக உயிரிழந்தான்.

## கலாசாலையில் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

"சிங்கள குடியேற்றவாதமும் ஈழத்தின் மீதான பொருளாதாரப் பாதிப்புக்களும்" என்ற தலைப்பிலான கருத்தரங்கு, இன்று காலை 11 மணிக்கு பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் - யாழ்.பல்கலைக்கழக பொருளியற்துறையின் புலமையாளர் வி.நித்தியாணந்தம் கருத்துரை வழங்கவுள்ளார்.

இக்கருத்தரங்கினை, தமிழர் தேசிய விழிப்புணர்வுக் கழகத்தினர் ஏற்பாடு செய்துள்ளனர்.

## சமகால அரசியல் கருத்தரங்கு

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் ஏற்பாட்டில் - நாளை காலை 10 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில், சமகால அரசியல் கருத்தரங்கொன்று நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் தமிழீழத்தின் கடல்வளங்களும், மீனவர் எதிர்நோக்கும் சவால்களும் என்ற தலைப்பில் கலாநிதி சூசை ஆனந்தன் கருத்துரை வழங்கவுள்ளதாகவும், இதில் கலந்து கொண்டு மீனவர்களின் பிரச்சினை தொடர்பான தெளிவினைப் பெற்றுச் செல்லுமாறும் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையினர் அனைவரையும் கேட்டுள்ளனர்.

# வெலிக்கடைச் சிறைச்சாலையில் குற்றப் புலனாய்வுத்துறை விசாரணை!

(கொழும்பு)

வெலிக்கடைச் சிறைசசாலைக்குள் - துப்பாக்கி ஒன்று சட்டவிரோதமாகக் கொண்டு செல்லப்பட்டதான சம்பவம் குறித்து, புலனாய்வுத் திணைக்களம் நேற்று விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

குற்றப்புலனாய்வு அதிகாரிகள்- நேற்று வெலிக்கடைச் சிறைச்சாலைக்குச் சென்று, இந்தச் சம்பவம் இடம்பெற்ற நேரத்தில் கடமையில் இருந்த அதிகாரிகளை விசாரித்தனர்.

தற்போது, சிறையிலுள்ள பாதாள உலகக் கோஷ்டித் தலைவரைக் கொலைசெய்யும் நோக்கில், கொழும்புக்கு அண்மையில் இருக்கும் வேறு ஒரு பாதாளக் குழு, அண்மையில் இந்தத் துப்பாக்கியை சிறைக்குள் அனுப்பியதாகத் தெரிவிக்கப்படுகிறது. (01)

# புற்றுநோய் நிபுணர்கள் யாழ்ப்பாணம் வருவர்!

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலிருந்து - புற்றுநோய் நிபுணர்கள் குழு ஒன்று யாழ்ப்பாணம் வரவுள்ளனர்.

யாழ்.குடாநாட்டில் - புற்றுநோயினால் பாதிக்கப்பட்ட நோயாளர்களுக்கான சிகிச்சையினை, இவர்கள் தெல்லிப்பளையில் நடத்தவுள்ளனர்.

எதிர்வரும் 12 ஆம், 13 ஆம், திகதிகளில் - தெல்லிப்பளை புற்றுநோய் சிகிச்சை நிலையத்தில் நடைபெறவுள்ளதாக, சுகாதார சேவைகள மாகாணப் பிரதிப் பணிப்பாளர், கலாநிதி க.தா.சிவபாதம் தெரிவித்துள்ளார்.

### பொலிஸில்...

பிரதிப் பொலிஸ் மா அதிபர் பதவி வெற்றிடங்கள் - ஐந்தும், சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி வெற்றிடங்கள்- பன்னிரண்டும், பொலிஸ் உத்தியோகத்தர் பதவிக்கு 112 வெற்றிடங்களும், உதவிப் பொலிஸ் உத்தியோகத்தர் பதவிக்கு 143 வெற்றிடங்களும் என, பொலிஸ் திணைக்களத்தில் பல்வேறு பகுதிகளில் வெற்றிடங்கள் பல நிரப்பப்படாமல் உள்ளது என்று, இந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

### புலிகள்....

மாயின் புலிக்கொடியும் ஏற்றலாம் எனத் தெரிவித்தார்.

இதேவேளை - புலிகள் தங்கள் தொலைத்தொடர்பு சாதனங்கள் அனுமதிக்கப்பட வேண்டுமென கோரியதற்கு, இராணுவத்தரப்பு இது தொடர்பாக - தாங்கள் முடிவு எடுக்க முடியாதென்றும், தமது இராணுவ தலைமைப்பீடத்திலேயே அனுமதி பெறவேண்டுமெனவும் தெரிவித்துள்ளார்.

இச்சந்திப்பு வழமையாக நடைபெறும் ஒருசந்திப்பு எனவும் தெரிவிக்கப்படுகிறது.

### யாழ் புனர்வாழ்வு...

மக்கள் வங்கியின், ஸ்ரான்லி வீதிக் கிளையில் மாற்றப்பட்ட 17 காசோலைகளையும், சி.ஐ.டியினரிடம் ஒப்படைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

முன்னர், இந்தக் காசோலைகளின் புகைப்படப்பிரதிகளையே தமக்குச் சமர்ப்பித்திருந்ததாகவும், இது விசாரணைக்கு போதியதாக இல்லையென்றும் - சி.ஐ.டி இன்ஸ்பெக்ரர் தர்மதாஸ, நீதிமன்றத்தில் கோரியதையடுத்தே, நீதிவான் இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

இந்த மோசடி தொடர்பான வழக்கு விசாரணை, ஒக்ரோபர் முதலாம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

### ஜே.வி.பி...

சுதந்திரக்கட்சிக்கும், மக்கள் விடுதலை முன்னணிக்கும் இடையில்- பேச்சுவார்த்தை நடத்தப்போவதாக, தங்களுக்கு அறிவிக்கவில்லையென்றும், அதனால் பேச்சுவார்த்தையில் எட்டப்படும் தீர்மானங்களைத் தாங்கள் கௌரவிக்க வேண்டு மென்ற அவசியமில்லை என்றும், பட்டி வீரக்கோன் மேலும் தெரிவித்தார்.

### தமிழர்...

ருந்த மனிநேயக் கண்ணிவெடி அகற்றும் பிரிவினரின் வாகனமொன்றும் சேதமடைந்தது.

சம்பவம் நடைபெற்ற இடத்திற்குச் சென்ற போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் விசாரணைகளை மேற்கொண்டனர்.

தாக்குதல் நடைபெற்ற இடத்திற்குச் சென்றிருந்த மட்டக்களப்பு பொலிஸார், சம்பவம் தொடர்பாகக் கேட்டறிந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## நாடாளுமன்றில் அமளிதுமளி

(கொழும்பு)

பிரிட்டிஷ் விசா விண்ணப்பத்தில் கைரேகை பதிவது சம்பந்தமாக, நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்தப்படவேண்டுமென்ற, எதிர்க்கட்சியினரின் கோரிக்கையை சபாநாயகர் நிராகரித்ததினால், நாடாளுமன்றில் நேற்று பெரும் அமளிதுமளி ஏற்பட்டது. இதனால், சபாநாயகர் நாடாளுமன்றத்தை ஒத்திவைத்தார்.

இது சம்பந்தமாக, எதிர்க்கட்சித் தலைவர் மங்கள சமரவீர வழக்கொன்றைத் தாக்கல் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

பெரியரசடி காழியன் கல்வி நிலையம் சாவகச்சேரி
O/L மாணவர்களுக்கான துரித மீட்டல் வினா விடை வகுப்பு ஆரம்பம்
09-08-2003 சனி காலை 6.15 (பு.நே)
கணிதம்:- திரு V.நடேஸ்வரன், திரு K.பாஸ்கரன்
விஞ்ஞானம்:- திரு K.காண்டீபன்
சனி, ஞாயிறு } காலை 6.15 - 8.15 (பு.நே)
குறிப்பு - தென்மராட்சியில் ஆசிரியர்களது மீட்டல் வகுப்பு இந்த நிலையத்தில் மட்டுமே நடைபெறும்.
தரம் 4 இற்கு புலமைப்பரிசிலுக்கு தயார்ப்படுத்துவதற்கான புதிய வகுப்பு ஆரம்பம்
ஞாயிறு (10-08-2003) பி.ப 3.00
(446)

# மரண அறிவித்தல்

## நாகர் காசிப்பிள்ளை



மூளாயை பிறப்பிடமாக கொண்ட நாகர் காசிப்பிள்ளை 04-08-2003 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் புஸ்பமலரின் அன்புக் கணவரும், பரமேஸ்வரன் (சுவிஸ்), தர்மகுலசிங்கம் (சுவிஸ்), சிவஈஸ்வரி (சுவிஸ்), சுபாஸ்கரன் (ரகு - பிரான்ஸ்), சுரேஸ்குமார் (ரூபன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 07-08-2003 இன்று வியாழக்கிழமை காலை 9.30 மணியளவில் மூளாய் பித்தனை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
கா.புஸ்பமலர் (மனைவி)
மூளாய் தெற்கு
சுழிபுரம்
(445)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 07:08.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.